www.padippakam.com

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
SEINE - FRANCE

# புதிய பார்வை

பார்வை - 14 ஆடி - ஆவணி - 1992

## மக்கள் நலன்கருதி அரசியல்தீர்வாக ஏழுகட்சிக்கூட்டணி முன்வைக்கும்

# நாலம்சக்கோரிக்கை

*தமிழ்பேசும் மக்களின் இனப்பிரச்சனை தீர்வில் வடக்கு கிழக்கு இணைப்பு ஒரு முக்கிய இடத்தை வகுக்கிறது. பாராளு மன்ற தெரிவுக்குழுவின் தலைவர் மங்கள முனசிங்கா இரண்டு மாகாணங்கள் திட்டத்தை முன்வைத்துள்ளார். இந்நிலையில் இணைந்த வடக்கு - கிழக்கு மாகாண விடயத்தில் உறுதியாயிருப்பது என முடிவெடுத்துள்ள ஏழுகட்சிகள் கூட்டணி தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.*

தமிழ்பேசும் மக்கள் அழிவின் விளிம்புக்கு தள்ளப்பட்டுவரும் இந்நிலையில் இராணுவத் தீர்வை கைவிட்டு அரசியல்தீர்வை அணுகுமாறு ஏழுகட்சிக்கூட்டணி தொடர்ந்து பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் வலியுறுத்தி வருகிறது.

பிரதான கட்சிகளான ஐ.தே.கட்சியும், ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் இனப்பிரச்சனைக்கான எந்த ஒரு அரசியல்தீர்வையும் முன்வைக்காத இந்நிலையில், இனப்பிரச்சனையை தீர்ப்பதற்கு அடிப்படை அம்சங்களை உள்ளடக்கிய நாலம்சக் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழர்விடுதலைக்கூட்டணி, ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஈழவர் ஜனநாயக முன்னணி, ஈழத்தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி ஆகிய ஏழு கட்சிகளும் இணைந்து சமர்ப்பித்துள்ள நான்கம்சக் கோரிக்கைகளாவன:

1 இணைக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணத்தில் அரசியல் நிர்வாக அமைப்பு முறையை உருவாக்குதல்.

2 அந்த அரசியல் அமைப்பு முறைக்கு அதிகாரப் பரவலாக்கம் செய்வதன் மூலம் பொருள் பதிந்த சுயாட்சியை ஏற்படுத்துதல்.

3 முஸ்லீம் மக்களின் தனித்துவம், பாதுகாப்பு என்பனவற்றை உறுதிப்படுத்தும் விதத்தில் மாகாண அரசியல் நிர்வாக அமைப்பின் கீழ் முஸ்லீம்களுக் கென தனி ஒரு சபையை ஏற்படுத்துதல்.

4 இலங்கையில் வாழும் சிறுபான்மை மக்களால் அனுபவிக்கப்படும் சகல உரிமைகளையும் வடக்கு கிழக்கில் வாழும் சிங்கள மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தல்.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு நாலம்சக் கோரிக்கையை முன்வைத்ததோடு தமது கடமை முடிந்து விட்டதாக இந்த ஏழுகட்சிக் கூட்டணி கருதவில்லை. தென்னிலங்கையிலுள்ள அரசியல் கட்சிகளையும், முஸ்லீம் கட்சிகளையும் சந்தித்து இந்த நாலம்சக் கோரிக்கைக்கு ஆதரவு திரட்டியும் வருகின்றனர்.

ஏழுகட்சிக்கூட்டணியின் இந்த அரசியல் நடவடிக்கைக்கு இலங்கைத் தோட்டத்தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் வரவேற்புத் தெரிவித்துள்ளதோடு, முழு ஒத்துழைப்பும் வழங்க முன்வந்துள்ளார்.

இந்த நாலம்சக் கோரிக்கை தொடர்பாக ஏழுகட்சிக்கூட்டணியினர் ஜனாதிபதி பிரேமதாசாவை சந்தித்த போது தொண்டமானும் கலந்து கொண்டார். இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு இந்நாலம்சக் கோரிக்கையின் அவசியத்தையும், முக்கியத்துவத்தையும் தொண்டமானின் வரவேற்பும் ஒத்துழைப்பும் பிரதிபலிப்பதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் தீர்ப்பை தாம் நடைமுறைப்படுத்துவதாக பிரேமதாசா தெரிவித்துள்ளார். ஆனால் பிரேமதாசாவோ ஐ.தே.கட்சியோ இனப்பிரச்சனையை முன்னிட்டு எந்த ஒரு தீர்வையும் முன்வைக்கவில்லை என ஏழுகட்சிகள் கூட்டணி பிரேமதாசாவுக்கு எடுத்துக்கூறியுள்ளனர்.

கம்யூனிஸ்ட் கட்சியுடனான நாலம்சக் கோரிக்கை தொடர்பான சந்திப்பில் தமிழ் கட்சிகளின் நிலைப்பாட்டுக்கு பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் தாம் ஆதரவாகச் செயற்படுவதாக கம்யூனிஸ்ட் கட்சி தெரித்துள்ளது

நவசமசமாஜக் கட்சியின் சார்பில் வாசுதேவ நாணயக்கார கருத்து தெரிவிக்கையில் இந்த நாலம்சத் திட்டத்திற்கு பாராளுமன்றத் தெரிவுக் குழுவிலும் வெளியிலும் பூரணஆதரவு தெரிவிப்பதாக ஏழுகட்சியினரிடம் தெரிவித்துள்ளார். அத்தோடு நின்று விடாது அக்கட்சியின் பொதுச் செயலாளர் விக்ரமபாகு கருணாரத்ன தமது ஆதரவினை பத்திரிகை செய்திமூலமும் வெளிப்படுத்தியுள்ளார்.

லிபரல்கட்சி கருத்து தெரிவிக்கையில் வடக்கு கிழக்கில் வாழும் சிங்கள முஸ்லீம் மக்களின் உரிமைகள் வழங்கப்பட்டால் நாம் வடக்கு கிழக்கு இணைப்பை ஆதரிப்போம் என தெரிவித்துள்ளனர்.

ஏழுகட்சிக்கூட்டணியின் நாலம்சக் கோரிக்கையை தாம் ஆதரிப்பதாக ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் வி.பி. கணேசன் தெரிவித்துள்ளார்.

(இரண்டாம் பக்கம் பார்க்க........)




## மீண்டும் தரப்படுத்தலா?

1990ம் ஆண்டு நடைபெற்ற உயர்தரப் பரீட்சையும் 91ம் ஆண்டு சித்திரையில் தமிழ்ப்பகுதிகளில் நடைபெற்ற விசேட பரீட்சையும் இருவேறு பரீட்சைகளாக கருதுவதாக தீர்மானிக்கப் பட்டிருப்பதால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப் படுவார்கள். இத்தீர்மானத்தினால் விசேட புள்ளிகள் பெற்ற மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதிமறுக்கப்படும் அதேவேளை குறைந்தபுள்ளிகள் பெற்ற மாணவர்கள் அனுமதிபெறுவார்கள். இது பழைய தரப்படுத்தல் முறைக்கு ஒப்பானதாகும் எனவும் இம்முடிவை மாற்றுமாறும் யாழ் பழைய மாணவர்சங்கம் அண்மையில் ஜனாதிபதிக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. இது தொடர்பாக ஈ.பி.ஆர்.எல்.எவ். பாராளுமன்ற உறுப்பினர் குழுவொன்று உயர்கல்வி அமைச்சர் ஏ.சி.எச்.கமீட்டை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது. இக்குழுவிற்கு தலைமைதாங்கிச் சென்ற செயலாளர் நாயகம் தோழர். க.பிரேமச்சந்திரன் பாதுகாப்பு நிலைமை காரணமாக வெவ்வேறான உயர்தரப் பரீட்சைகள் நடாத்தப்பட்டதற்கு மாணவர்கள் பொறுப்பல்ல எனவும் இரு பரீட்சைகளிலும் தோற்றிய மாணவர்களை ஒரே அடிப்படையில் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்க வேண்டும் எனவும் உயர்கல்வி அமைச்சின் தீர்மானம் யாழ்மாவட்ட மாணவர்கள் மீது திணிக்கப்படும் தரப்படுத்தல் ஆகும் எனவும் அமைச்சரிடம் தெரிவித்துள்ளார்.

## மனிதனை இழந்தோம்

அக்கரைப்பற்றினை பிறப்பிடமாகக்கொண்டவரும், அம்பாறை கரையோர விவசாயிகள் சம்மேளனத் தலைவருமாக இருந்து செயற்பட்டுவந்த ஈஸ்டன் இப்ராகிம் இன்று எம்முடன் இல்லை. அகால மரணத்தில் சிக்கிய ஈஸ்டன் இப்ராகிம் தான் வாழ்ந்த காலத்தில் தமிழ்பேசும் மக்களுக்கான அமைதி, சமாதானம் ஏற்பட அயராது உழைத்தவர்.

தமிழ் முஸ்லீம் மக்களின் ஒற்றுமைக்காக பாடுபட்டவர். இலங்கை இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டபோது அதனைவரவேற்று பகிரங்க அறிக்கை விட்டவர். அறிக்கையோடு நில்லாது அமைதி, சமாதான சூழல் ஏற்பட அல்லும் பகலும் பாடுபட்டவர். திட்டமிட்ட குடியேற்றங்களுக்கு எதிராக குரல் கொடுத்தவர்.

மக்கள் நலன்விரும்பிய தூய்மையான ஒரு மனிதனின் இழப்புக்கு 'புதியபார்வை' தனது அஞ்சலியை செலுத்துகிறது.

**எமது மக்களுக்கு அமைதி, சமாதானம், சமத்துவம், ஜனநாயகம் கிடைக்கும்வரை நாம் இறுதிவரை உறுதியுடன் போராடுவோம்**

www.padippakam.com



## எமது பார்வையில்

சிறீலங்கா இனவாத அரசாங்கம் தமிழ்பேசும் மக்கள் மீது தொடர்ந்திருக்கும் யுத்தத்தின் உச்சக்கட்டமாக குடாநாட்டின்மீது ஒரு பெரும்தாக்குதலை ஆரம்பித்து விட்டது. நவீன ஆயுதங்கள் சகிதம் ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் மற்றும் கடற்படை, விமானப்படையினரால் நடத்தப்படும் இத்தாக்குதல்களில் எமது மக்கள் ஏராளமான உயிர், உடமை இழப்புக்களுக்குள்ளாகிக் கொண்டிருக்கிறார்கள்.

இராணுவத்தாக்குதல்கள், மக்களின் உயிர்ச்சேதங்கள் பற்றிய விபரங்கள் அரசாங்கத்தால் தொடர்ந்து இருட்டடிப்புச் செய்யப்பட்டு வருகின்றது. குடாநாட்டில் என்ன நடக்கிறது என்ற விபரமே சரியாக எவருக்கும் தெரியவில்லை. ஆனால் கடந்தகாலங்களை விட மிகமோசமான இழப்புக்களை எம்மக்கள் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்.

தங்கள் வதிவிடங்களை விட்டுவெளியேறி குறிப்பிட்ட இடங்களில் தஞ்சம்புகுமாறு மக்கள் அரசபடையினரால் உத்தரவிடப்பட்டுள்ளார்கள். பல்லாயிரக்கணக்கான அப்பாவிமக்கள் ஆலயங்களிலும், பள்ளிக்கூடங்களிலும் தங்கள் சொந்த மண்ணிலேயே மீண்டும் ஒருமுறை அகதிகளாகவேண்டிய அவலம் நிகழ்ந்திருக்கிறது. பலகிராமங்களிலிருந்து மக்கள் ஒட்டுமொத்தமாக அகதிகளாக வெளியேறியுள்ளனர்.

மக்கள் அகதிகளாக தஞ்சம் புகுந்த இடங்களும் அரசபடையினரின் விமானக்குண்டு வீச்சுக்களுக்கும், ஷெல்லடிகளுக்கும் உள்ளாகியிருக்கின்றன. ஊரடங்குஉத்தரவுபிறப்பிக்கப்பட்டு மக்கள் மீதான தாக்குதல்கள் தரை, கடல், வான் எனப்பல முனைகளிலும் முடுக்கப்பட்டுள்ளன.

யுத்தில் தங்கள் கைகளை வலுப்படுத்துவதற்காக சிறீலங்கா படைகள் மனிதாபிமானமில்லாமல் மிகக்கோரமான யுத்தத்தை எம்மக்கள் மீது திணித்துள்ளன. உயிர் தப்புதலுக்கான வழிவகை ஏதுமில்லாத எமது மக்கள் மரணத்தை நேரடியாக எதிர்கொள்ள வேண்டிய ஒரு அபாயகரமான நிலைக்கு இன்று தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

இனப்பிரச்சனை தொடர்பாக நாள்தோறும் வெற்று அறிக்கைகள்... சர்வகட்சி மாநாடு, பாராளுமன்றக்குழு என்பது போன்ற பகட்டு நாடகங்கள்.... மேடைகள் தோறும் ஜனாதிபதி பிரேமதாசா தன்னை ஒரு சமாதான விரும்பியாக பிரகடனப்படுத்துகின்ற பேச்சுக்கள்... அரசுக்கு ஆலவட்டம் பிடிக்கும் தமிழ்அமைப்புக்களும், அவசரகாலநிலையை நீடித்து அக்கிரமங்களை சட்டரீதியாக அரசாங்கம் செய்யஆதரவளிக்கும் தமிழ் அரசியல்கட்சிகளும் பிரேமதாசாவாலை நண்பனா நல்லிணக்கம் காணவிரும்புவராக செய்துவரும் வர்ணனைகளும் பொய்என்பது மீண்டும் ஒருமுறை எம்மக்களின் இரத்தத்தின்மீது நிருபிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது இந்த அரசாங்கம் நாட்டின் எரியும் பிரச்சனையாகிய இனப்பிரச்சனைக்கு அமைதியான முறையில் தீர்வொன்றைக் காணவிரும்பவில்லை. பேச்சுவார்த்தை மூலம் தீர்வொன்று அணுகப்படுவதை விரும்பவில்லை. இனப்பிரச்சனைக்கான தீர்வொன்று சுமுகமான முறையில் காணப்படுவதை விரும்பவில்லை. இதற்கான செயற்திட்டத்தை முன்வைப்பதற்கும் தயாராகவில்லை. தமிழ்பேசும் மக்களின் இறைமைகளை அங்கீகரிக்க மட்டுமல்ல வாழும் உரிமையை வழங்குவதற்குக்கூட இந்த அரசு தயாராக இல்லை என்பதை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாம் பலதடவைகள் பகிரங்கமாகக் கூறி இருக்கிறோம்.

அதுமாத்திரமல்ல பிரேமதாசாவின் தலைமையிலான இந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் இனப்பிரச்சனைக்கு ஒரு இராணுவக்தீர்வு காணப்படுவதையே விரும்புகிறது. தமிழ்பேசும் மக்களின் உரிமைக்கான போராட்டம் தனது இரும்புக் கரங்களினாலேயே அடக்கப்படவேண்டும் என்பதிலேயே நாட்டம் கொண்டுள்ளது. மிகமோசமான ஒர யுத்தத்தை மட்டுமல்ல மனிதநேயம் சிறிதுமேயற்ற ஒரு பொருளாதாரத்தடையையும் விதித்து வருகிறது.

இதன் காரணமாகவே புலிகளுக்கு எதிரான யுத்தம் என்றபெயரில் இந்த அரசாங்கம் எமது மக்கள்மீது தொடுத்திருக்கும் இந்தயுத்தத்தில் எந்தவிதமான ஒத்துழைப்பையும் தருவதற்கு நாம் மறுத்துவருகிறோம். அரசபயங்கரவாதம் எம்மை பல்வேறு முனைகளில் எதிர்கொண்டபோதும் எம்தோழர்களை பல வகைகளிலும் பலிகொண்ட போதும் நாம் தொடர்ந்தும் துணிவுடன் இந்த இனவாத அரசுக்கு எதிராகச் செயற்படுகிறோம்.
அரசாங்கமும், அதன் ஆதரவு அமைப்புகளும் ஏன் புலிகளும் இணைந்து எமக்கெதிரான ஒரு பிரச்சார யுத்தத்தை தொடர்ந்துள்ள போதும் கூட இந்த அரசாங்கம் தோற்கடிக்கப்படவேண்டும்... எம்மக்களின் முதல் எதிரி இந்த அரசாங்கமே என்பதில் உறுதியுள்ளவர்களாக எதிர்க்கட்சிகளுடன் இணைந்து ஜனநாயகரீதியிலான அரச எதிர்ப்பு போராட்டங்களை நாம் முன்னெடுத்து வருகிறோம். ஆனால் இன்று தமிழ்பேசும் மக்களின் தரப்பு மிகவும் பலவீனமான நிலையிலுள்ளது. அரசபடையினர் பலமுனைகளில் கையோங்கியுள்ளனர். எமது நிலத்தின் பல பகுதிகள் தொடர்ந்தும் அரசாங்கத்தின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்திற்கு படையினரின் பாதுகாப்புடன் உள்ளாகிவருகிறது. பிரித்தாளும் தந்திரத்தைப் பயன்படுத்தி அரசு பல தமிழ் அமைப்புக்களை தம்வசப்படுத்தி வைத்துள்ளது. புலிகளிடமிருந்து தப்புவதற்காக இவ்வமைப்புக்கள் வேறுவழியின்றி அரசின் காலடிகளில் போய்நிற்கின்றன.

அதுபோலவே புலிகளினால் பாதிக்கப்பட்ட....பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் முஸ்லீம் மக்களின் மனங்களில் விதையாகிய தமிழர் விரோத உணர்வு அரசால் நீரூற்றி வளர்க்கப்படுகிறது.

அனைத்துக்கும் மேலாக இதுவரைகாலமும் தமிழ்பேசும் மக்கள் மீது உக்கிரமான தாக்குதல்கள் நடக்கும்போது சிறீலங்கா அரசின்மீது நிர்ப்பந்தங்களை பிரயோகித்த இந்தியஅரசு புலிகளின் அரசியல் குருட்டுத்தனத்தால் தூரவே நிற்கிறது. இந்தப்பிரச்சனைகளில் இந்தியா கண்ணைமூடியதால் சர்வதேச சமூகம் இப்பிரச்சனைகளின் மீது தன் கண்பார்வையை திருப்ப மறுக்கிறது.

இவை அனைத்துமே தமிழ்பேசும் மக்கள் மீது மிகமோசமான இராணுவ வெறியாட்டம் ஒன்றை இம்முறை கட்டவிழ்த்துவிட அரசாங்கத்துக்கு வசதியான சந்தர்ப்பத்தைக் கொடுத்துவிட்டது.

தமிழ்பேசும் மக்கள்வேறு புலிகள்வேறு என்பதை இந்தியஅரசு உணர்ந்துகொள்ள வேண்டும். சர்வதேச சமூகத்தின் துணையுடன் சிறீலங்கா அரசின்மீது நிர்ப்பங்களைப் பிரயோகிக்க இந்தியா முன்வரவேண்டும். தனது விருப்பு வெறுப்புக்களை ஒருபுறமாக மூட்டைகட்டி வைத்துவிட்டு தமிழ்பேசும் மக்களுக்கு உதவ இந்தியா உடனடியாக முன்வரவேண்டும்.

தனக்கு மிக அருகில் ஒரு இன மக்கள் படுகொலையாவதை, இராணுவக் கால்களுக்குக் கீழ் நசுங்குவதை வெறுமனே இந்தியா கைகட்டிப் பார்த்துக்கொண்டிருக்கக் கூடாது. உடனடியாக ஒரு யுத்தநிறுத்தத்தை ஏற்படுத்துவதற்கான அரசியல் அழுத்தங்களை இந்தியா சிறீலங்கா அரசுமீது பிரயோகிக்க வேண்டும்.

## வவுனியாக் கூட்டத்தில்..

(ஆறாம் பக்கத் தொடர்ச்சி...

ஆளும் உரிமையையும் படுகொலைசெய்த துரோகிகளை இனங்காணச் செய்துவிட்டது.

இவர்களது மக்கள் விரோதச்செயல், காங்கேசன்துறை துறைமுகத்தில் இறக்கப்படும் உணவுப் பொருட்களை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச்செல்லும் லொறிகளுக்கு தடை விதித்ததன்மூலம் நிருபிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் யாழ்ப்பாண மக்களை பட்டினி போட்டு கொல்ல புலிகள் தயாராகி விட்டார்கள் என்பதையே இது எடுத்துக் காட்டுகிறது. பேரினவாத அரசின் பொருளாதாரத் தடையால் அவதியுறும் மக்களுக்கு உணவு விநியோகத்திற்கு புலிகள் தடை விதிப்பதன்மூலம் இவர்கள் ஆளும் வர்க்கத்தின் நலனுக்கு உதவும் செயலையே செய்கிறார்கள் என்பது மேலும் தெளிவாகிவிட்டது.

இந்தப்புலிகள் இயக்கம் ஜனநாயக வழிக்குத் திரும்ப இரண்டு சந்தர்ப்பம் கிடைத்தது ஒன்று வடக்கு கிழக்கு மாகாண இடைக்கால நிர்வாகம் இவர்களுக்கு வழங்கப் பட்டது. இதையேற்று செயற்படத் தயங்கிய புலிகள் அனாவசியமாக இந்தியப்படையுடன் மோதி தமிழினத்துக்கு பேரழிவைத் தேடித்தந்தார்கள்.

இரண்டாவது முறையாக ஸ்ரீ லங்கா அரசுடன் ஒருவருடம் நாலுமாதமாக பேசி புலிகள் மக்கள் முன்னணி என அரசியல் கட்சியாக தங்களை அங்கீகரிக்கச் செய்த புலிகள், தேர்தல் மூலம் வடக்கு கிழக்கு மாகாணசபைக்கு வருவதை விரும்பாது, மாகாண அரசை ஸ்ரீ லங்கா இனவாத ஆட்சியாளரால் கலைக்கச்செய்து மீண்டும் ஒரு யுத்தத்தையும் பேரழிவையும் தமிழ்பேசும் மக்களுக்கு கொண்டுவந்தார்கள். இவர்களை ஜனநாயக வழிக்குக் கொண்டுவர முடியுமென ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்கள் இன்னமும் நம்புவது நாய்வாலை நிமிர்த்திய கதையாகவே முடியும்.

புலிகளின் இந்த அழிவுப் பாதைக்கு எதிராக, அராஜக நடவடிக்கைகளுக்கு எதிராக, மக்களின் ஜனநாயக சுதந்திரங்களை மறுப்பதற்கெதிராகப் போராடி தமிழ்பேசும் மக்களுக்கு அமைதி, சமாதானம், ஜனநாயகம் என்பவற்றை கொண்டுவர பெரும் தியாகத்துடன் போராடியதாலேயே பத்மநாபாவும் தோழர்களும் படுகொலை செய்யப்பட்டார்கள்.
நாடுகளினதும், இனங்களினதும் சுதந்திரத்துக்கு, விடுதலைக்கு போராடி மரணித்த தியாகிகளின் வரிசையில் தோழர். நாபாவும் நிரந்தரமாக இடம்பெற்று விட்டார் அவரின் புகழ் என்றும் அழியாது நிலைத்து நிற்கும்.

## மக்கள் நலன்கருதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.....).

ஏழுகட்சிக்கூட்டணியுடனான சந்திப்பில் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி சார்பில் ஸ்ரீ மாவோ பண்டாரநாயக்கா கலந்து கொண்டார். தமிழ் கட்சிகள் எடுத்துரைத்தவற்றை கேட்டறிந்த ஸ்ரீ மாவோ தான் செயற்குழுவுடன் கலந்தாலோசிப்பதாக தெரிவித்தார் ஆனால் சுதந்திரக்கட்சியின் செயற்குழ இந்த நாலம்சக் கோரிக்கையை ஏற்றுக் கொள்வதில்லை என தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
முஸ்லீம் காங்கிரஷ், நாலம்சக் கோரிக்கை தொடர்பான ஜனாதிபதியுடனான சந்திப்பில் ஏழுகட்சிக் கூட்டணியினருடன் கலந்து கொண்டது. அக்கட்சியின் பதினோராவது பேராளர் மாநாட்டில் அதன் தலைவர் அஷ்ரப் பேசும் போது 'மட்டக்களப்பு, திருகோணமலை, வன்னிமாவட்டங்களில் உள்ள முஸ்லீம்களை திருப்திப்படுத்தாத எந்தத்தீர்வையும் ஏற்றுக் கொள்ளமாட்டோம் ' என்றார்.

இதனைத் தொடர்ந்து ஏழுகட்சிகளின் கூட்டணி ஏழுஅம்சங்கள் அடங்கிய பத்திரம் ஒன்றை முஸ்லீம் காங்கிரஸை சந்தித்து கையளித்துள்ளனர். அதற்கு பதிலாக பதின்னாங்கு அம்சங்கள் அடங்கிய பதில் ஒன்று முஸ்லீம் காங்கிரஸால் ஏழுகட்சிக்கூட்டணியினரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இன்றைய நிலையில் இந்த நாலம்சக் கோரிக்கையானது அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். இதில் ஏழுகட்சிகளும் உறுதியுடன் செயற்படுவது தென்னிலங்கையில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## ஏன் செலவினம்?

வடக்கு கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் சட்டப்படி மாகாணசபை போக்குவரத்து சபையை நடத்த அனுமதிகேட்டார். ஆனால் அது மறுக்கப்பட்டது. அந்த காரணத்திற்காகத் தான் அரசாங்கம் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தினமும் 600 லட்சம் ரூபா செலவிடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஆனால் பிரச்சனை இன்னும் தீர்ந்தபாடில்லை. என மேல்மாகாண சபையின் மாதாந்தக் கூட்டத்தில் உரையாற்றிய மேல் மாகாணசபையின் எதிர்கட்சி தலைவர் ஒஸ்அபயகுணசேகர கூறினார்.

www.padippakam.com



# கொழும்புக் கடிதம்

ஏ.கே.எஸ்.

கம் உதாவ 92 என்று நாடுமுழுவதும் பிரச்சாரம் செய்யப்பட்ட புத்தான கிராமஎழுச்சிக் கண்காட்சியும், களியாட்டுவிழாவும், ஜனாதிபதி பிரேமதாசாவின் பிறந்ததினமும் யூன் 23 ல் கோலாகலமாக ஆரம்பமாகியது. மந்திரி பிரதானிகள் புடைசூழ ஆயுதப்படைகள், பொலிசாரின் அணிவகுப்புகள், கலாச்சார நடன ஊர்வலங்கள், பௌத்த பெரஹராக்களுடன் ஜனாதிபதி பிரேமதாசா 13 தினங்கள் பவனிவந்து யூலை 3 ம் திகதி நள்ளிரவுக்குப் பின்னால் நிறைவெய்தியது. கடந்த ஓராண்டாக தயார் செய்யப்பட்ட கட்டிடத்தொகுதிகள், வீதிஅமைப்புக்கள் கொண்ட நூறு ஏக்கர் காணியில் ஏற்பாடுசெய்யப்பட்ட இந்தவிழா இருநூறுகோடி ரூபாவை விழுங்கி ஏப்பமிட்டுவிட்டது.

மொனராகல மாவட்ட மக்களுக்கு என்றும் கண்டிராத கண்காட்சியும், களியாட்டுவிழாவும் பிரேமதாசாவின் பிறந்ததின அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இந்தக் கிராம எழுச்சிக்கண்காட்சியில் ஜனாதிபதியின் பாரியார் ஹேமா பிரேமதாசா அள்ள அள்ளக் குறையாத அட்சயபாத்திரத்துடன் மக்களுக்கு தாராளமாக அள்ளி அள்ளி வழங்கி ஜனாதிபதியின் பிறந்ததினத்திற்கு சோபை அளித்தார். இத்தனைக்கும் ஜனாதிபதியின் பிறந்ததினம் யூலை 3 ம் திகதிதான் என்று சொல்லப்படுகிறது.

பிரேமதாசா தனது பெருந்தன்மையை எடுத்துக்காட்டுவதற்காக தனது பிறந்ததினத்தை முன்னிட்டு நன்கொடைகள், பரிசுப்பொருட்கள் எதுவும் வழங்கவேண்டாம் எனக் கேட்டுக்கொண்டார். அதேநேரம் அவற்றை வெள்ள நிவாரணநிதிக்கு அளிக்குமாறு வேண்டுகோள் விடுத்தார்.

இந்தச்சந்தர்ப்பத்தை சரியாக உபயோகிக்கத் தெரிந்த, 'இறால் போட்டு சுறா பிடிக்கும்' தனவந்தர்கள் தமது பொதுநலனை எடுத்துக்காட்ட இந்தச் சந்தர்ப்பத்தை நன்றாக பயன்படுத்திக்கொண்டார்கள். ஒருகோடியே பதினேழு இலட்சத்து நாற்பத்தொன்பதாயிரத்து மூன்றுரூபா அறுபத்தாறுசதம் வெள்ளநிவாரண நிதிக்கு சேர்ந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த வெள்ளத்தில் வீடுவாசலைவிட்டு அகதியாகிவிட்ட மக்களுக்கு சமீபத்தில் பெய்த மழையில் மீண்டும் அவலப்பட்டபோதும் அவர்களுக்கு எந்தநிவாரணமும் வழங்கப்படவில்லை என பாராளுமன்றத்தில் எதிர்கட்சியினர் சிலதினங்களுக்கு முன்னர் குரல் எழுப்பியது குறிப்பிடத்தக்கது.

அதேநேரம் இவ்வாறு பிறந்ததினத்தை கொண்டாட இருநூறுகோடி ரூபாவை செலவு செய்து மக்களின் வரிப்பணத்தை நாசம் செய்வதுதான் அபிவிருத்தியா என எதிர் கட்சியினர் பாராளுமன்றத்தில் குற்றம் சாட்டியுள்ளனர். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி பா.உ. ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளை 'இருநூறுகோடி ரூபாவில் பிறந்தநாள் விழா ஒன்று கொண்டாடப்பட்டது. இதற்கான பிறந்தநாள் கேக் ஒன்றுக்கு 25 ஆயிரம் ரூபா செலவுசெய்யப்பட்டது. பிறந்தநாள் பார்ட்டிக்கு கொழும்பு உல்லாச ஹோட்டலில் இருந்து உணவு கொண்டுசெல்லப்பட்டது. இந்தப் பிறந்நாள் பார்ட்டிச்செலவைக் கொண்டு சமூகப்பணியாற்றி இருக்கலாமே' என பாராளுமன்றத்தில் எடுத்துரைத்தார்

கடந்த வரவு செலவுத்திட்டத்தில் அறிமுகம் செய்யப்பட்ட யுத்தத்துக்கான பாதுகாப்பு வரி, இலங்கையில் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக நடந்துவரும் யுத்தத்தில் புதிய அம்சமாக ஐ.தே.கட்சி அறிமுகம் செய்தது. ஆறுமாதம் செல்வதற்கிடையில் அது எட்டுச்சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. அது அடுத்தவருட வரவுசெலவுத்திட்டத்தில் பத்துசதவீதமாக அதிகரித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இதில் என்ன விசேடமென்றால் தமிழினம் தன்னைக்கொலை செய்வதற்காக, அழிப்பதற்காக ஸ்ரீ லங்கா அரசுக்கு பாதுகாப்பு வரி செலுத்த நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளது. அதேநேரம் புலிகளுக்கு யுத்தநிதிக்கு வீட்டுக்கு இரண்டுபவுண் செலுத்த வேண்டி இருப்பதுடன் போக்குவரத்து, உணவுப் பொருட்கள் உட்பட அத்தனை பொருட்களுக்கும் ஏன் உற்பத்திப் பொருட்களுக்குமே வரி கட்டவேண்டி இருக்கிறது.

நிவாரணப் பொருட்களுக்கும் சம்பளத்துக்கும் 10% வரி அறவிடப்படுகிறது. இவ்விதமாக யுத்தத்துக்கான இரட்டை வரி விதிப்புக்கு உள்ளானவர்கள் தமிழ்பேசும் மக்களே. சமீபத்தில் இரண்டு இலட்சம் ரூபா கப்பம்கட்டக் கோரியதால் புலிகளின் தொல்லை தாங்காமல் மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் நஞ்சூட்டி தானும் தற்கொலை செய்துகொண்ட குடும்பத்தலைவன், முனைக்காடு கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த 48 வயதுடைய இராசன் என்பவராகும்.

இந்தப் பாதுகாப்பு வரி அதிகரிப்பு சம்பந்தமான விவாதம் பாராளுமன்றத்தில் ஆரம்பமாகியபோது அதை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய நிமல் ஸ்ரீ பால சில்வா (சு.க.) 'எல்.ரி.ரி.ஈ.உடன் அரசுநடத்தும் யுத்தம் யப்பானில் உடல்பருத்த மனிதர் நடத்தும் மல்யுத்தம் போன்றது.' என வர்ணித்த அவர் எல்.ரி.ரி.ஈ. க்கு அரசு பணம் ஆயுதம் ஆகியவற்றை வழங்கிவிட்டு அவற்றை அழிக்க இப்போது யுத்தம் நடத்துகிறது என்றார்.

இனப்பிரச்சனைக்கு தீர்வுகாணாதவரை நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாது என்ற உண்மை நிலைமையை எடுத்துரைத்தார் யாழ்மாவட்ட ஈ.பி.ஆர்.எல்.எவ். பாராளுமன்ற உறுப்பினர் தோழர்.கே.பிரேமச்சந்திரன். தமிழ்பேசும் மக்களின் பிரச்சனைகளை உணர்ந்து தமிழ்கட்சிகள் முன்வைக்கும் நியாயபூர்வமான கோரிக்கைகளை பரிசீலித்து, விட்டுக்கொடுப்பதன்மூலம் இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாண முன்வருமாறு கேட்டுக்கொண்டார். விமானப்படை விமானம் ஒன்று வெடித்துச் சிதறியது பற்றியும் தனது பேச்சில் குறிப்பிட தவறவில்லை.

பாதுகாப்பு வரிமூலம் அறவிடப்படும் பணம் புலிகளுக்கு வழங்கப்படுமோ என சந்தேகம் தெரிவித்தார் டி.எம்.ஜெயரத்ன (சு.க.) தமிழ் முஸ்லீம் மக்களின் சுயாட்சி உரிமையை ஆதரித்துப் பேசினார் நவசமசமாஜக் கட்சி பா.உ. வாசுதேவநாணயக்கார

வடக்கு கிழக்கு முஸ்லீம்களும் இனப்பிரச்சனையால் பாதிக்கப்பட்டு இருப்பதை எடுத்து விளக்கிய முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் 'சிங்களவர், தமிழர் மட்டும் பேசிப் பிரச்சனையைத் தீர்க்க முடியாது. முஸ்லீம்களுடனும் பேசவேண்டும். அவர்களின் அபிலாசைகளையும் மதிக்க வேண்டும்' எனக் கேட்டுக் கொண்டார்.

பெரும்பான்மைக் கட்சிகள் சிறுபான்மைக் கட்சிகளுடன் மனம்விட்டுப் பேசி இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாண முடியாதா? எனக் கேள்வி எழுப்பினார் யாழ்மாவட்ட ஈ.பி.ஆர்.எல்.எவ். பா.உ. தோழர்.கே. நவரத்தினம். அடுத்த தேர்தல் வெற்றியை மட்டும் கவனத்தில்வைத்து செயல்படும்நிலை காணப்படுவதை சுட்டிக்காட்டினார் அவர்

வடக்கு கிழக்கு யுத்தத்துக்கு 20 பில்லியன் ரூபா செலவாகிறது. புனர்வாழ்வுக்கு ஏழு அல்லது எட்டுக்கோடி செலவாகிறது. யுத்தம் நின்றால் இந்த 27 பில்லியனையும் அபிவிருத்திக்கு செலவிடமுடியும் என அமைச்சர் விமல் விக்கிரம சிங்க குறிப்பிட்டார். பாதுகாப்பு வரி அதிகரிப்பால் பால்மா, சீனி, பருப்பு, மருந்து வகைகள் விலைகள் அதிகரித்துள்ளதாக ரிச்சாட் பத்திரான பா. உ. தெரிவித்தார். 'ஹெல உறுமய'வைச்சேர்ந்த எட்டுப்பேர் அண்மையில் யுத்தமுனைக்குச் சென்று பார்வையிட்டதாக தெரிவித்த என்.எஸ். குணசேகர பா. உ. வாக்கெடுப்பின்போது சபையில் இருக்கவில்லை.

கிராமோதய நிலையத்தில் நடைபெற்ற வாராந்த பத்திரிகையாளர் மாநாட்டில் வை-8 விமானம் நொருங்கியதற்கு பல்வேறு காரணம் கூறப்பட்டாலும் இன்னமும் உண்மையான காரணம் கண்டுபிடிக்கப்படவில்லை என்பதை விமானப்படையின் விங் கொமாண்டர் ஜெயலத் வீரக்கொடி பத்திரிகையாளரிடம் தெரிவித்தார். வை-8 விமானங்கள் இரண்டுதான் இருந்தது. ஒன்று பழுது பார்க்கப்படுகிறது. மற்றையது விபத்தில் நொருங்கி விட்டது என்பதை அவர் ஏற்றுக் கொண்டார். படையினர் போக்குவரத்து எப்படி நடைபெறுகிறது என பத்திரிகையாளர் கேட்டபோது விங் கொமாண்டர் 'வேறுவிதமான விமானங்களும் எம்மிடம் இருக்கிறது. வை-8 விமானங்களை மட்டும் நாம் பயன்படுத்துவதில்லை. இந்த விமானங்கள் யுத்தத்தையும் நடத்தவில்லை. அவ்ரோ விமானங்கள் ஐந்து உள்ளன. கப்பல்களும் உள்ளன' எனத் தெரிவித்தார்.

வை-8 விமானம் விபத்துக்குள்ளானபோது பீப்பாய்க் குண்டுகள் இருந்தனவா என்ற பத்திரிகையாளரின் கேள்விக்கு, பீப்பாய்க் குண்டுகள் இருக்கவில்லை. கிரனைட்டுகள் வெடிமருந்துகள் இருந்தன என விங்கொமாண்டர் பதிலளித்தார். தாக்குதலுக்கு இவ் விமானம் பயன்படுத்தப்படவில்லை. பலாலிநோக்கி பயணமாகியது. சம்பவம் நடந்தபோது ஆறாயிரம் அடி உயரத்தில் பறந்ததாக அவர் தெரிவித்தார். எல்.ரி.ரி. ஈ யினரின் 'ஸ்டிங்கர்' தாக்குதலுக்கு விமானம் இலக்கானதா என பத்திரிகையாளர் வினாவியபோது விங் கொமாண்டர் 'ஸ்டிங்கர்' ஏவப்பட்டிருந்தால் தரையில் இருந்த இராணுவத்தினர் கண்டிருப்பார்கள். விமானத்தில் குண்டு வெடித்திருந்தால் வானத்திலேயே விமானம் வெடித்து சிதறியிருக்கும். ஆனால் இந்த விமானம் மூன்று துண்டுகளாக வெடித்ததையே அவதானித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

விமானம் எப்படி அனர்த்தத்துக்கு உள்ளானது என்ற பத்திரிகையாளரின் கேள்விக்கு விங் கொமாண்டர் 'சில தகவல்களே கிடைத்துள்ளன. உண்மை நிலையைக் கண்டறிய இன்னமும் முயற்சி நடக்கிறது. நேரடியாக விபத்து இப்படித்தான் நடந்தது என்று யாராலும் கூறமுடியாதுள்ளது. விமானம் ஆறாயிரம் அடி உயரத்தில் பறக்கும்போது விமான நிலையத்துடன் தொடர்பு இருந்தது' எனத் தெரிவித்தார்.

விமானத்தின் பெறுமதி எவ்வளவு இருக்கும் என்ற கேள்விக்கு, இது முன்னர் வாங்கிய விமானம். இப்போது விலைதெரியாது. இதுபோன்ற ஐரோப்பிய விமானம் ஒன்றின் விலை 20 மில்லியன் அமெரிக்க டொலர் இருக்குமென விங் கொமாண்டர் பதிலளித்தார். இறந்தவர்களின் சடலங்களை மட்க நடவடிக்கை எடுக்கப்பட்டதா? என்ற கேள்விக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் தொடர்பு கொண்டுள்ளோம். அவர்கள் புலிகளுடன் தொடர்பு கொள்வார்கள் என விங் கொமாண்டர் தெரிவித்தால். அப்போது பிரட்மன் வீரக்கூன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் தொடர்பு கொண்டதில் சடலங்களின் பகுதிகளே கிடைத்தாகவும் அவை தகனம் செய்யப்பட்டு விட்டதாக புலிகள் கூறியதாக தெரிவித்தார்.

அதேநேரம் யாழ்குடாநாட்டில் யுத்தத்தில் இறக்கும் புலிகளை தகனம் செய்ய விறகு தட்டுப்பாடு காரணமாக வரிசை வரிசையாக அடக்கம் செய்துவருவதாக விசயம் அறிந்தவர்கள் தெரிவித்தனர். ஆகவே ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களில் ஆலோசகரான பிரட்மன் வீரக்கூன் சொல்வதில் எந்தவித உண்மையும் இருப்பதாக தெரியவில்லை.

வெற்றிலைக்கேணியில் தரையிறங்கிய படையினர் கடற்படை உதவியுடன் முன்னேறி பெரும் இழப்புக்கள் மத்தியில் ஆனையிறவை அடைந்ததுடன் யக்கச்சி நகரத்தையும் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்துள்ளனர். அங்கிருந்து யக்கச்சியில் விமானம் விழுந்து நொருங்கிய இடத்தை அடைந்து, விமானச்சிதைவுகள் மத்தியில் சிதைந்த நிலையில் அழுகிப்போன விமானப்படையினரின் 10 சடலங்களை படையினர் கண்டு எடுத்ததாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேநேரம் யக்கச்சியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரின் ஷெல்லடி குண்டு வீச்சுக்கள் காரணமாக பளைப்பகுதி பெரும் சேதத்துக்குள்ளாகியதுடன் அங்கிருந்த மக்கள் வெளியேறி நாலு மைல் தொலைவிலுள்ள எழுதுமட்டுவாளை சென்றடைந்துள்ளதாக தெரிகிறது.

படிப்பகம்

www.padippakam.com



# நாபா மரணித்த இரு வருடங்களில்....

"14 மாதங்கள் இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்திய புலிகள் அரசியலுக்கு வரத்தென்பில்லாமல் மீண்டும் யுத்தத்தை தொடங்கினார்கள். அவர்கள் இடைக்கால நிர்வாகத்தை ஏற்று அரசியல் ரீதியாக தம்மைப் பலப்படுத்தி ஆட்சிக்கு வந்திருக்கக்கூடிய சந்தர்ப்பத்தை தவறவிட்டதுமல்லாமல் அநாவசியமான யுத்தத்தைதொடங்கி தமிழ் பிரதேசத்திற்கும், தமிழ்மக்களுக்கும் பேரழிவை ஏற்படுத்தி வருகிறார்கள்." இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எவ்.ன் தொழிற்சங்க பிரிவுத் தலைவர் தோழர்.வீ.ஏ. கந்தசாமி அண்மையில் கடந்தமாதம் வவுனியாவில் நடைபெற்ற அமரர் தோழர். பத்மநாபாவின் இரண்டாவது நினைவுதினக் கூட்டத்தில் உரையாற்றிய போது குறிப்பிட்டுள்ளார். புலிகளின் அரசியல் வறுமையையும், தமிழ்மக்களின் நலனைவிடத் தமது சொந்த நன்மைகளையே முக்கியமாகக் கருதிச்செயற்படும் அவர்களின் போக்கையும் சில வார்த்தைகளில் தோழர் கந்தசாமி மிகவும் தெட்டத் தெளிவாக படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

தோழர்.பத்மநாபாவுடன் தோழர்கள் யோகசங்கரி, கிருபா உட்பட 12 தோழர்கள் சென்னையில் புலிகளால் படுகொலை செய்யப்பட்டு ஆனி 19 உடன் இரண்டு வருடங்கள் பூர்த்தியாகிவிட்டது. இலங்கை இராணுவத்துடன் புலிகள் மீண்டும் மோதல்களை ஆரம்பித்தும் ஆனி 11 உடன் இரண்டு வருடங்கள் பூர்த்தியாகிவிட்டது.

தோழர்.நாபா போன்ற நிகரற்ற தலைவர்களைக் கொலை செய்துவிட்டுப் புலிகளால் தமிழ்பேசும் மக்களின் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல முடிந்ததா என்பதை சில நிமிடங்கள் நாம் சிந்தித்துப் பார்ப்பதற்கு இவ்வாண்டு நிறைவுதினங்கள் ஒரு நல்ல சந்தர்ப்பமாகும்.
மட்டகளப்பில் தமது ஆதரவாளர் ஒருவருக்கும், மாற்றான் மனைவிக்குமிடையில் இருந்து வந்த தொடர்பு சம்பந்தமாக ஏற்பட்ட பிணக்கினால் அரசபடைகள் மீது மேற்கொண்ட தமது தாக்குதல் நடவடிக்கைகளைப் புலிகள் விரைவிலேயே இது இறுதிப்போர் என்று மக்களை நம்பவைத்து கோடிக்கணக்காக பணத்தை வசூல் பண்ண ஆரம்பித்தனர்.

ஆயிரக்கணக்கான இளம் சிறார்களைக் கட்டாய ஆயுதப் பயிற்சிக்குள்ளாக்கி தமது சுயநலன்களைத் தக்கவைத்துக் கொள்வதற்காக இச்சிறார்களைப் பலிகொடுக்கவும் தொடங்கினர்.

மோதல் ஆரம்பிக்கப்பட்டு ஐந்தாவதுதினத்தில் அதாவது ஆனி 15ம் திகதியன்று தோழர் பத்மநாபா விடுத்த அறிக்கையில் "இந்த யுத்தத்தில் எவருக்கும் வெற்றி கிட்டாது. மாறாக பல உயிர்இழப்புக்களே ஏற்படும். புலிகளும் அரசும் உடனே மோதல்களை நிறுத்தி, அனைத்துக் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடாத்தி அரசியல் தீர்வைக் காண முன்வரவேண்டும்" என வேண்டுகோள் விடுத்திருந்தார்.

மக்கள் நலன்கருதியும், நாட்டின் நலன் கருதியும் தோழர். நாபாவினால் விடுக்கப்பட்ட அந்த வேண்டுகோள் துரதிஷ்ட வசமாக செவிடன் காதில் ஊதிய சங்குபோலாயிற்று. அன்று தோழர் நாபாவும், அவர்வழி நடத்தலில் வளர்ந்த ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் அஞ்சியது இன்று நிஜமாகிவிட்டதானது மிகவும் வருந்தத் தக்கதே.

கடந்த இரண்டுவருடக் காலப்பகுதியில், மக்கள் என்றும் காணாத அளவுக்குத் துன்பங்களை அனுபவித்து வருவதோடு மிகவும் துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். 10 இலட்சம் பேருக்குமேல் அகதிகளாகி உள்ளனர். பத்தாயிரத்துக்கு மேற்பட்டோர் உயிர்களை இழந்துள்ளனர். பலகோடிரூபா பெறுமதியான சொத்துக்கள் நாசமடைந்துள்ளது.

முன்னெப்போதும் இல்லாத அளவுக்குத் தமிழ் பேசும்மக்கள் பல இன்னல்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் என்ற கசப்பான உண்மையைப் புலிகளின் தலைவர்களே பல சந்தர்ப்பங்களில் ஏற்றுக்கொண்டுள்ளனர். அதேநேரம் இந்நிலைமைக்கு தமது சுயநலமே காரணம் என்பதை ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு மனத்தைரியத்தை வளர்த்துக் கொள்ளாமல் இன்னும் கோழைகளாகவே இருந்து வருகின்றனர்.

இரண்டு வருடங்களுக்கு முன்பு இணைக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணத்தில் அமைக்கப்பட்ட மாகாண அரசுக்கு அதிகாரங்களைப் பெற்றுக்கொள்வதற்காகப் போராட வேண்டிய நிலையில் தமிழ்பேசும் மக்களின் அரசியல் நிலைஇருந்தது. இன்று வடக்குக் கிழக்கின் இணைப்பை பாதுகாப்பதற்கு போராடவேண்டிய நிலையில் அரசியல் நிலைமை உள்ளது. சிங்களப் பேரினவாத சூழ்ச்சித் திட்டங்களுக்குப் புலிகள் உறுதுணையாக இருந்ததே இப்பின்னடைவுக்குக் காரணம் என்று சொன்னால் அது மிகையாகாது.

எமது நியாயமான போராட்டத்துக்குச் சர்வதேச சமூகத்தில் இருந்துவந்த ஆதரவு, புலிகளின் மனிதாபிமானமற்ற அப்பாவி மக்களின் படுகொலைகளாலும், போதைப் பொருள் கடத்தல் போன்ற சமூகவிரோதச் செயல்களாலும் படிப் படியாக குறைந்து வந்தது. இறுதியில் முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியின் கொலையுடன் இந்த ஆதரவு முற்றாக இல்லாமல் போனதோடு மட்டுமல்லாமல் எதிர்ப்புக்கள் வளரும் நிலைமையும் தோன்றியுள்ளது.
நடந்தவை நடந்து விட்டன. பொன்னான சந்தர்ப்பங்களை இழந்தது இழந்துவிட்டோம். இனி என்ன செய்யலாம் என்று சிந்திப்பது பயனைத்தரும்.

தற்போது ஏழுதமிழ் கட்சிகள் ஒன்றாக இணைந்து தமது குறைந்தபட்சக் கோரிக்கைகளாக நான்கு அம்சத்திட்டத்தை முன்வைத்துள்ளனர். ஏழுதமிழ் கட்சிகளும் ஒன்றாக இணைந்து ஒரேகுரலில் தமது கோரிக்கைகளை முன்வைத்துள்ளமை தென்னிலங்கை அரசியல் கட்சிகள் மத்தியில் பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்தாத போதிலும் ஒருவித தாக்கத்தை உண்டுபண்ணியுள்ளமை மறுக்கமுடியாத உண்மையாகும். குறிப்பாகப் பேரினவாத சக்திகள் மத்தியில் கணிசமான அளவு கிலியை ஏற்படுத்தியுள்ளது.

தென்னிலங்கையில் பிரதானகட்சிகள் இரண்டும் இனப்பிரச்சனைக்கு தீர்வுகாண்பதில் விட்டுக் கொடுக்கும் நிலைக்கு வருவதாக தெரியவில்லை. இருந்தும் தமிழ்கட்சிகள் தென்னிலங்கை அரசியல் கட்சிகளிடம் தமது நாலம்சக் கோரிக்கைக்கு ஆதரவு திரட்டுவதில் ஈடுபட்டு வருகின்றனர்.

இச்சந்தர்ப்பத்தில் சுதந்திரமாக எமது எண்ணங்களை வெளிப்படுத்தக்கூடிய சூழ்நிலையில் வசிக்கும் நாம் தமிழ்கட்சிகளால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளுக்கு ஆதரவு தெரிவிப்பதன் மூலம், அக்கோரிக்கைகளை மேலும் வலுப்பெறச் செய்யமுடியும். ஆதரவை இழந்துவிட்ட எமது போராட்டத்துக்கு சர்வதேச சமூகத்தின் மத்தியில் மீண்டும் ஆதரவை வளர்க்கும் முயற்சிகளில் நாம் ஈடுபடவேண்டும்.

புலிகளின் நிலைப்பாடு என்ன என்றொரு கேள்வி மனதில் எழுவதை நாம் தவிர்த்துக் கொள்ளமுடியாததுதான். வடக்கு கிழக்கில் அமைதி நிலையைத் தோற்றுவிப்பதில் புலிகள் எவ்வளவு அக்கறை கொண்டுள்ளார்கள் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். தனிநாடு தான் தமது தீர்வு, மாற்றுத் திட்டத்தை வைப்பது அரசின்கடமை என வாதிட்டு அவர்கள் தப்பிக்கொள்ள முயற்சிக்கலாம். அப்படியே தனிநாடு தான் தீர்வென்றால், அமைச்சர் தொண்டமானையும், மதகுருமார்களையும், தெரிவுக்குழுவையும் யாழ்ப்பாணம் வருமாறு அழைப்புக்கள் விடுத்திருக்கத் தேவையில்லை.

ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை வெற்றிபெறலாம் என்று பரவலாக நம்பப்பட்டசமயம், தமது உறுப்பினர்களைக் கொழும்புக்கு அனுப்பி ஆதரவு தெரிவித்திருக்கத் தேவையில்லை. எனவே தனிநாடு, தாகம் என்று புலிகள் சொல்வது வெறும் வெற்றுப் பேச்சே.

வக்கிரபுத்தியுடன் வெறும் வார்த்தை ஜாலங்களை அள்ளிவீசுவதை விடுத்துத் தமது நிலைப்பாட்டைத் தெளிவாகத் தெரிவிக்கும் அளவிற்கு அரசியல் அறிவை அவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

பிரச்சனைக்குத் தீர்வுகாண்பதில் அக்கறை காட்டவேண்டியவர்கள் தமிழ்பேசும் மக்களாகிய நாங்களே. ஏனெனில் அழிந்து கொண்டிருப்பது எமது இனம். இந்த இடத்தில் இனவாத அரசின் இன ஒழிப்பு நடவடிக்கைகளுக்குப் புலிகள் எவ்வாறு உறுதுணையாக இருந்து வருகின்றனர் என்பதையும் கணநேரம் சிந்திக்க வேண்டியுள்ளது.
புலிகளை அழிக்கிறோம் என்ற போர்வையிலேயே அரசபடைகள் இனஒழிப்பு நடவடிக்கைகளை சாதித்து வருகின்றன. புலிகள் ஆயுதமேந்தி உள்ளதனாலும், ஆயுத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதனாலும் தமது இராணுவ நடவடிக்கைகளுக்கு நியாயம் கற்பிக்கும் அரசின் முயற்சிகள் வெற்றி பெற்று வருகின்றது. மக்களைக் காக்கவே தாம் ஆயுதம் ஏந்தியுள்ளோம் என்று புலிகள் சொல்வது முழுப் பூசனிக்காயை சோற்றுக்குள் மறைப்பது போலாகும்.

இலங்கையில் வாழும் தமிழ்பேசும் மக்களில் பெரும்பான்மையோர் அரசபடைகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களிலும், அவர்களின் தயவிலுமே வாழ்கின்றனர். இந்த நிலையில் தமிழ்மக்களின் பாதுகாப்புக்கே நாம் ஆயுதம் வைத்திருக்கிறோம் என்று சொல்வது எந்தவகையில் அர்த்தமுள்ளதாகும்.

யாழ்ப்பாணத்துக்குள் இராணுவம் நுழைந்தால் தாம் காட்டிற்குச் சென்று யுத்தத்தை தொடருவோம் என்று அடுக்கடுக்காகப் பேட்டிகள் வேறு கொடுத்து வருகின்றனர். காட்டுக்குள் போயிருந்து எந்த மக்களைப் பாதுகாக்கப் போகிறார்கள்? மொத்தத்தில் புலிகள் ஆயுதம் வைத்திருப்பது, ஸ்ரீ லங்கா அரசின் இன ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு உதவியாக இருந்து வருகின்றது என்பதே உண்மை

இதனாலேயே சில தமிழ்கட்சிகள், புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்கவேண்டும் என கோரிவருகின்றனர். புலிகள் ஆயுதங்களைக் கீழேபோடுவது குறித்து தோழர். கேதீஸ்வரன் "சண்டே ரைம்ஸ்" என்ற பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் "புலிகள் ஆயுதங்களைக் கீழேவைக்கும் அதேசமயம் அரசபடைகளும் தமது முகாம்களுக்குப் பின்வாங்கவேண்டும்". என தெரிவித்து ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் நிலைப்பாட்டை தெளிவாக்கியுள்ளார்.
ஆகவே புலிகளின் நிலைப்பாடு என்ன என்ற எமது கேள்விக்குப் புலிகள் துணிந்து பதில் தரமுன்வரவேண்டும். ஏனைய தமிழ்கட்சிகள் முன்வைத்துள்ள நான்கம்சக் கோரிக்கைகள் பற்றித் தமது கருத்தைத் தெரிவிக்க வேண்டும். அல்லது மாற்றுயோசனைகளையாவது முன்வைக்க வேண்டும்.

தனிநாடுதான் தீர்வு, மக்களைப் பாதுகாக்கவே ஆயுதம் வைத்துள்ளோம் என்று சொல்லித் தப்பித்துவரும் தலைவர்களிடம் புலிகளின் ஆதரவாளர்கள் இக்கேள்விகளை எழுப்பி அவர்களுக்கு (தலைவர்களுக்கு) வழிகாட்ட முயலவேண்டும். இயலாது போனால், போலிக் கௌரவங்களை மறந்து, எமது இனத்தின் அமைதிக்காக நான்கம்சத் திட்டத்திற்கு ஆதரவு வழங்க முன்வர வேண்டும்.

## தாஸ் - லண்டன்




சென்னையில்வைத்து புலிகளால் படுகொலை செய்யப்பட்ட தேழர்.நாபா மற்றும் பன்னிரு தோழர்களுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ஐரோப்பியபிரிவினால், ஜேர்மனியிலுள்ள பேர்லின் நகரில் நடத்தப்பட்ட, இரண்டாவது நினைவஞ்சலிக்கூட்டத்தில், விடுதலைப் போராட்டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ். என்னும் தலைப்பில் இடம்பெற்ற கண்காட்சியின் ஒருபகுதியை மக்கள்பார்வையிடுவதை மேலே காண்க.

படிப்பகம்

www.padippakam.com



# நினைவஞ்சலிக் கூட்டங்கள்

தோழர்.நாபா மற்றும் பல்மிரு தோழர்களின் இரண்டாவது ஆண்டு புரட்சிகர நினைவஞ்சலி அனைத்திடங்களிலும் கொண்டாடப் பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் புழல்முகாமில், ஈ. பி. ஆர். எல். எவ். தோழர்கள், ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்களால் கொண்டாடப்பட்டுள்ளது. பல தமிழகஅரசியல் பிரமுகர்கள் பங்கேற்றார்கள். லண்டனில் முன்னணித்தோழர்களால் நினைவுகூரலும் கலந்துரையாடலும் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பில் பொதுமக்களால் மதவழிபாட்டு தலங்களில் மதப்பிரார்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டன. அனாதை இல்லங்கள், அகதிமுகாம்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. தோழர்.சிவஞானம் தலைமையில் இடம்பெற்ற புரட்சிகர நினைவஞ்சலிக் கூட்டத்தில் புளொட், ரெலோ, ஈரோஸ் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

வவுனியாவில் ஈ.பி.ஆர். எல். எவ். பாராளுமன்ற உறுப்பினர். தோழர். இராஜகுகனேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் தோழர்.வீ.ஏ.கந்தசாமி சிறப்புரை ஆற்றினார். புளொட் சார்பில் கிருபைராஜா, விசுபாரதி ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

பிரான்சில் உள்ள பரிஸ்நகரில் அனைத்திடங்களிலும் தோழர்களின் நினைவாக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

ஜேர்மனியில் உள்ள பேர்லின் நகரில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ஐரோப்பியப் பிரிவினால் புரட்சிகர நினைவஞ்சலிக்கூட்டம் நடாத்தப்பட்டது. தோழர்.ஈஸ்வரி வேலாயுதம் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் 'விடுதலைப் போராட்டமும் ஈ.பி.ஆர்.எல். எவ். உம்' என்ற தலைப்பில் கண்காட்சி ஒன்று இடம்பெற்றது. முன்னணித் தோழர்கள் உரையாற்றினர். கவிதாநிகழ்வு இடம்பெற்றது. கலைநிகழ்ச்சியாக 'அமைதியை நோக்கி' என்னும் தலைப்பில் வில்லிசை நிகழ்ச்சி ஒன்றும் இடம்பெற்றது. 'புரட்சிகர பாடல்கள்' நிகழ்வில் பெண்கள் பங்கேற்றனர்.



தோழர். பத்மநாபா நினைவுக் கேடயத்திற்காக மட்டக்களப்பு மாவட்டரீதியில் நடைபெற்ற உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டி மட்டக்களப்பு பாடும்மீன் விளையாட்டுக்கழகத்துக்கும் ஏறாவூர் வை.எஸ்.எஸ். விளையாட்டுக்கழகத்துக்கும் இடையில் நடைபெற்றது. இப்போட்டியில் பாடும்மீன் விளையாட்டுக்கழகம் 2 - 0 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.
மேற்படி பரிசளிப்புவிழாவில் பிரதமஅதிதியாகக் கலந்து கொண்ட மட்டக்களப்பு மாவட்ட ஈ.பி.ஆர்.எல். எவ். பாராளுமன்ற உறுப்பினர் தோழர். பிரின்ஸ் காசிநாதர் உரைநிகழ்த்துவதை முதலாவது படத்திலும், வெற்றிபெற்ற பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தலைவர் வெற்றிக்கேடயத்தை பிரமதஅதிதியிடமிருந்து பெற்றுக்கொள்வதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

* * * * * * *

**வவுனியாவில் இடம்பெற்ற நாபா நினைவுகூரல் கூட்டத்தில் தோழர். வீ.ஏ.கந்தசாமி அவர்கள் ஆற்றிய உரை.**

மக்களுக்காகவே வாழ்ந்து மக்களுக்காகவே போராடி மக்கள் சேவைக்காகவே மரணத்தை எய்தியவர் தலைவர் பத்மநாபா. தமிழர் சமுதாயத்துக்காக, அதன் விடுதலைக்காக கூட்டாக உழைத்த அவர் தமது தோழர்களுடன் கூட்டாகவே படுகொலை செய்யப்பட்டார். மக்கள் விரோதிகள் அவரை மட்டும் கொலை செய்யவில்லை. அவரால் உருவாக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாண அரசையும், ஸ்ரீ லங்கா அரசின் உதவியுடன், முதலமைச்சரின் அனுமதியில்லாது கலைக்க முடியாத மாகாணஅரசை பாராளுமன்றத்தின் விசேட தீர்மானத்தின்மூலம் கலைத்துக் கொலை செய்து விட்டார்கள்.

இதன்மூலம் மீண்டும் தமிழ்பேசும் மக்கள் சிங்களப் பேரினவாதிகளால் ஆளப்படும் நிலையை உருவாக்கி விட்டார்கள். இதன் விளைவு மீண்டும் தமிழ்பேசும் மக்களை பேரழிவுக்கு உள்ளாக்கி பல இலட்சக்கணக்கில் மக்களை அகதிகளாக்க சொந்த மண்ணைவிட்டு வெளியேறச் செய்து விட்டார்கள். இன்று தமிழ்பேசும் மக்கள் நாபாவினதும் அவர் தோழர்களினதும் படுகொலை மட்டுமல்ல, தமிழினம் தன்னைத்தானே

(இரண்டாம் பக்கம் பார்க்க........)

## ஈராண்டென்ன.......

ஈராண்டா இறந்ததின்று?
நேராய் --
முன் -- நிற்பதுபோல்
நின துருவம்!
நாபா!
நாமெல்லாம் இன்னும்
நடந்த நிகழ்வுகளில் !

கொடியவரால் --
கொலையுண்டாய்
எனுஞ் செய்தி
நேற்றுப் போலே
நெஞ்சிற் கனக்கிறதே !
ஈராண்டா அதற்குள்
இறந்து போனதையா ?

நீ --
நடந்தால் நிலங்கூடக்
கம்பீரம் பெற்றதொரு
காலம் !
வானம் --
உனக்கு வாழ்த்துத் தூவிற்று
பூமி அப்போது
புளகாங்கிதம் கொண்டது !
ஆதலி னால்தானோ
தோழா நின்மெய்
துளைத்துக் களித்தனர் !
துரோகக் கூட்டம்.

இலட்சியக் கனவுகளில்
இதயம் நிறைத்து ;
தன்னம்பிக்கை
தளரா துழைத்த
மாமனிதன் !
அதற்குள் --
மடிவாய் என்று
கனவிலும் கண்டிலோம்
விடியும் எனத்தானே,
விழிபூத் திருந்தோம் !
ஈராண்டென்ன.....
ஈராயிரமாண்டு
உதிர்ந்து சென்றாலும்
உன்னை மறவா
உள்ளங்கள்
உலகிருக்கும் தோழா !
உன் உறவிருக்கும் நாபா !

நீ --
மரணித்தாய் என்று
மனதேற்க வில்லை
வாழ்கின்றாய் என்றேதான்
வாழ்கிறோம் என்றும் !

உன் --
கல்லறைக்குத் தென்றல்
காற்றைத் தூது விட்டேன் !
என் --
கண்ணீர் அஞ்சலியை
அதனிடம் சொல்லிவிட்டேன்.

* * * * * * * ஞானி * * * * * *

★ ★ ★ ★ ★

பேர்ளினில் நடந்த நாபா நினைவஞ்சலிக் கூட்டத்தில் இடம்பெற்ற கவிதாநிகழ்வில் வாசிக்கப்பட்டது.

## மூச்சில் உள்ளவனே

ஆனி-19.

பாய்ந்தது குருதியாறு - எம்
கண்களில் கண்ணீரு
கண்டாய் நீ வரலாறு.

பூவுடல் மண்மீது
புழுதியில் செந்நீரு
பொங்கிய எம்மனது
பொறுக்குமா உன்உறவு.

வீழ்ந்தாய் நீ இளம்குருத்து
விடிவே உன்கருத்து
வரலாற்றில் உன்இழப்பு
வகுத்ததடா புதுத்துடிப்பு.

காற்றும் உன் இழப்பை
கவிதையாய் சொல்கையிலே
கேட்டு எம் மனது
கொதித்ததடா வெந்நீராய்.

வேட்டுக்கள் உனைத்துளைக்க
வேங்கை நீ தலைசாய்க்க
காற்றிலே உயிர்கலக்க
கண்ணீரில் நாம் மிதக்க
புழுதியில் நீ கிடக்க
புனிதமாய் மண் சிவக்க
பொங்கியே நீ எரிய
பொன்னுடல் சாம்பராக

சாம்பலோ காற்றில் சேர
காற்று என் மூச்சாய் மாற
மூச்சிலே நீ இருக்க
முடியுமா மறக்க உன்னை.

(ரூபன் - லண்டன்)

படிப்பகம்

www.padippakam.com



# அன்பார்ந்த தமிழ் பேசும் மக்களே!

**அன்பார்ந்த தமிழ்பேசும் மக்களே!**

வடக்கின் மீதான தனது மிகமுர்க்கமான தாக்குதலை சிறீலங்கா அரசாங்கம் ஆரம்பித்து விட்டது. மாகாணஅரசாங்கக் காலத்தில் வடக்கு கிழக்குக்கு அப்பாலும், அதற்குப் பின்னர் ஆனையிறவுக்கு அப்பாலும் இருந்த ஸ்ரீலங்காப் படையினர் இப்போது தீவுப்பகுதிகளைக் கைப்பற்றியதுடன் ஓயாமல் குடாநாட்டினுள்ளும் தெல்லிப்பளை, சேந்தான்குளம், பலாலி, கீரிமலை, மாதகல், இடைக்காடு என பல இடங்களில் கால்களைப் பதிக்க ஆரம்பித்து விட்டனர்.

இருந்தும், இன்னும் எதுவும் நடக்கவில்லை என்பது போலவும்.... குடாநாட்டுக்குள் இராணுவமே இல்லை என்பது போலவும் ... போர் முனைகளில் 'நின்று போராடும்' புலிகளின் 'வீரமிகு' தாக்குதல்களில் இராணுவம் புறமுதுகு காட்டி ஓடிச்செல்வதாகவும்...போர்க்களத்தில் புலிகள் சாவதில்லை. தனியே படையினர் மாத்திரம் கொல்லப் படுவதாகவும்.... புலிகளின் நிர்வாகத்தில் பாலும் தேனும் பெருகுவதாகவும்... ஐரோப்பாவிலிருந்து வெளியாகும் நடுநிலை(?) பத்திரிகைகள் இங்கே மக்களுக்கு அம்புலிமாமா கதை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

இங்கே உதாரணத்துக்கு சிலசெய்தித் தலைப்புகளையும் ஆசிரியர்களின் கருத்துக்களை(?)யும் பார்ப்போம். 'விடுதலைப் புலிகள் விரும்பாத தீர்வு நடைமுறைக்கு சாத்தியமற்றது', 'விடுதலைப்புலிகளை நாங்கள் ஆதரிக்கிறோம்', புலிகளின் எதிர்ப்பை சமாளிக்க முடியாது தெல்லிப்பளையில் இராணுவம் பின்வாங்கியது', பெருந்தொகையான இளைஞர்களும் யுவதிகளும் புலிகளுடன் இணைகிறார்கள்', 'புலிகள்மீது இந்தியா தடை விவேகமற்ற நடவடிக்கை', 'கடைசிப் புலி உள்ளவரை போராட்டம் தொடரும்' என்கிற செய்தித் தலைப்புகளும்....

'நாட்டையும் [illegible] புலிகள் போராடிக் கொண்டிருக்கிறார்கள்... புலிகளே-உங்கள் வீரத்தை, தியாகத்தை மதிக்காதவன் உலகத்தில் தமிழனாக இல்லை....' ஈழத்தில் இப்போது நடக்கும் தாக்குதலை கண்டித்து டில்லியோ, தமிழ்நாடோ குரல் எழுப்பாததிலிருந்து ஈழமக்கள் அனைவரும் புலிகள் என்று ஏற்றுக் கொள்ளப் பட்டதாகவே அர்த்தம். இதனால் ஈழத்தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் புலிகளல்ல என்று யார் சொன்னாலும் இனி ஏற்றுக்கொள்ள முடியாது'

அன்பார்ந்த தமிழ்பேசும் மக்களே! இந்தச் செய்தித் தலைப்புக்களும், ஆசிரியர் குறிப்புக்களும், அரசியல் அவதானிகளின் பார்வைகளும், புலிகளின் 'விடுதலைப்புலிகள்' பத்திரிகையிலோ அல்லது 'களத்தில்' 'வீரவேங்கை' போன்ற பத்திரிகைகளிலோ வெளிவந்தவையல்ல. ஐரோப்பாவில் வெளியாகும் தமிழ்நடுநிலை(?) பத்திரிகைகள் அள்ளித் தெளித்தவை தான் இவை.

இன்று யாழ்ப்பாணத்தில் புலிகள் தவிர்ந்த வேறு எவரும் பத்திரிகை வெளியிடமுடியாது கருத்துச் சுதந்திரம் கழுத்து முறிக்கப் பட்டுள்ளது. புதுவைஇரத்தினதுரை, சிரித்திரன் சுந்தர், யோகராஜா போன்ற இலக்கியவாதிகள் கூட எழுத்தின் நேர்மையைவிட, மக்களின் அவலத்தைவிட தமது உயிர் காப்பாற்றப்படுதல் முக்கியம் என்ற காரணத்துக்காய் காகிதப் புலிகளாகி விட்டார்கள். ஆனால் இந்த ஐரோப்பிய பத்திரிகையாளருக்கு என்ன வந்தது?

இவர்களும் புலிகளின்மிரட்டல்களால் அருண்டு போனார்களா? அல்லது ஊரிலிருக்கும் உற்றவர்களின் உயிர்களைக் காப்பாற்றுவதற்காகமண்டியிடுகிறார்களா? அல்லது உண்மையிலேயே இவர்கள் புலிகளின் ஏஜென்டுகளா?

ஏனெனில் பொய்யான செய்திகளையும் புனைகதைகளையும் அள்ளி இறைத்து புலிகளுக்கு வக்காளத்து வாங்கும் இவர்களின் கண்ணில் பல விடயங்கள் படுவதில்லை. புலிகளின் வதைமுகாம்களில் இதர இயக்க உறுப்பினர்கள், அறிவியலாளர்கள், எதிர்க்கருத்து தெரிவித்தோர், கப்பம் செலுத்த மறுத்தோர் உட்பட ஆயிரத்துக்கு மேற்பட்டோர் சித்திரவதைக்கு கள்ளாகிவருவது, ஏன் கச்சாய் முகாம் போன்ற இடங்களில் பவுண் கொடுக்க வசதியற்ற பல வயோதிபர்கள் கடினமான வேலைகளைசெய்ய நிர்ப்பந்திக்கப்பட்டு வருவது எதுவுமே இந்த நடுநிலைப் பத்திரிகைகளுக்குத் தெரியாது.

> **இன்னும் எதுவும் நடக்கவில்லை என்பது போலவும்...குடாநாட்டுக்குள் இராணுவமே இல்லை என்பது போலவும்...... போர்முனைகளில் நின்று போராடும் புலிகளின் வீரமிகு தாக்குதல்களில் புறமுதுகு காட்டி ஓடிச்செல்வதாகவும்... போர்க்களத்தில் புலிகள் சாவதில்லை. தனியே படையினர் மாத்திரம் கொல்லப்படுவதாகவும்...புலிகளின் நிர்வாகத்தில் பாலும் தேனும் பெருகுவதாகவும்.. ஐரோப்பாவிலிருந்து வெளியாகும் நடுநிலை(?)பத்திரிகைகள் இங்கே மக்களுக்கு அம்புலிமாமா கதை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.**

புலிகளினால் மேற்கொள்ளப் பட்டுவரும் நடுவீதிப்படுகொலைகளை இந்த நடுநிலைகள் நியாயப்படுத்தும் உள்ளியக்கப் படுகொலைகளை கண்டுகொள்ளாது. இராணுவத் தாக்குதல்களில் 12-14வயதுக்குட்பட்ட பாலகர்கள் நூற்றுக்கணக்கில் கொல்லப் படுவது இவர்கள் கண்ணுக்குத் தெரியாது. ஆயிரக்கணக்கான இளம்புலிகள் களத்தில் சாக எப்படி புலிகளின் உயர்மட்டம் மாத்திரம் எந்தக் காயமும் இன்றி இருக்கிறது என்ற கேள்வியை இந்த நடுநிலைகள் எழுப்ப மாட்டார்கள்.

முஸ்லீம் மக்கள் புலிகளால் அடித்து விரட்டப்பட்டதை இந்தநடுநிலைகள் கண்டித்ததில்லை முஸ்லீம்மக்கள் புலிகளால் வெட்டிக் கொல்லப்பட்டதை இவர்கள் மூடி மறைத்தார்கள். எதிர்க்குரல் எழுப்ப மறுத்தார்கள். 'முஸ்லீம் மக்கள் துரோகிகள், அவர்கள் தமி மக்களின் எதிரிகள்' என்று யோகி நல்லூரில் பேசிய பேச்சை மூடிவைத்துவிட்டு 'எமக்கும் முஸ்லீம் மக்களுக்கும் எந்தப்பிரச்சனையுமில்லை. அரசாங்கமே திட்டமிட்டபிளவுகளை வளர்க்கிறது. கறுப்புப் பூனைகளே கொலைகளுக்கு காரணம்' என மறுப்பறிக்கை புகழ் திலகர் விடும் அறிக்கையை கட்டம் போட்டுக் பிரசுரிப்பார்கள்.

'பேச்சுவார்த்தைக்கு தயார்' என்று அன்டன் பாலசிங்கம் அறிக்கை விடுப்பார், 'கடைசிப் புலி உள்ளவரை போராட்டம் தொடரும்' என பிரபாகரன் பேட்டி கொடுப்பார் ஏன் இந்தமுரண்பாடு என்றெல்லாம் இவர்கள் கேட்க மாட்டார்கள். 'மாகாண சுயாட்சிக்கு நாம் தயார்' என்பார் அரசியல் ஆலோசகர், 'தமிழீழத்துக்கு குறைந்த எதற்குமே நாம் தயார் இல்லை' என்பார் தலைவர்' இதற்கு என்ன அர்த்தம் என்றெல்லாம் இந்த நடுநிலையாளர்கள் ஆராய மாட்டார்கள்.

பவுண் பறிப்பதைப்பற்றி, இளைஞர்களையும் யுவதிகளையும், பாலகர்களையும் கட்டாயமாக போர்முனைக்கு அனுப்பி பலிகொடுப்பது பற்றி, கஷ்டப்பட்டு சேர்த்த சொத்துக்களை சூறையாடுவது பற்றி, பல்கலைக்கழக மாணவர்கள் கடத்தப்பட்டு காணாமல் போனது பற்றி எல்லாம் இந்தநடுநிலைகள் கண்டு கொள்வதே இல்லை.

**அன்பார்ந்த தமிழ்பேசும் மக்களே!**

புலிகளின் உள்ஞர் அடக்கு முறைகள், அரசியல் குழறுபடிகள் இவை குறித்துத்தான் இந்த நடுநிலையாளர்களின் பார்வைகள் குருடாகிப் போனதென்றால் ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் புலிகள் கட்டவிழ்த்து விடும் காடைத்தனங்களும் இவர்கள் கண்ணுக்குத் தெரிவதில்லை.

வேலைவெட்டி எதுவுமில்லாமல் விதவிதமான வாகனங்களில் பவனிவரும் ஐரோப்பிய மாவீரர்கள் மக்களின் உழைப்பை மாதச்சம்பளத்தை தா இல்லையேல் ஊரில் பார்த்துக் கொள்வோம் என்று மிரட்டிப் பறிப்பதைப் *பற்றியோ அல்லது இலக்கியக் கூட்டங்களையும், அஞ்சலிக்கூட்டங்களையும் குழப்புவது பற்றியோ, மற்றப் பத்திரிகையாளர்களை மிரட்டுவது பற்றியோ, அஞ்சலிச் சுவரொட்டிகளையும் ஏன் சிறீலங்கா அரசின் அடக்குமுறையைக் கண்டிக்கும் இதர அமைப்புக்களின் சுவரொட்டிகளைக் கிழிப்பதையும் இந்த நடுநிலைகள் கண்டு கொள்வதில்லை.*

*கனடாவில் இளையபாரதி சுடப்பட்டது இவர்களது செய்திகளில் வந்ததில்லை. அவுஸ்திரேலியாவில் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட காசோலை மோசடிகள் இவர்கள் கண்ணுக்கு தெரிவதில்லை. நோர்வேயில் புலிகளின் மீது பொலிசார் எடுத்த அதிரடி நடவடிக்கைகள் இவர்களது நிருபர்களுக்கு எட்டியதில்லை. இன்னும் ஒருபடி மேலே போய் பரிசில் பத்திரிகை ஒன்று ஆண்டுவிழாநடத்தியது. அதில் நடந்த கவியரங்கொன்றிலும் நாடகம் ஒன்றிலும் முஸ்லீம் மக்களுக்கு அனுதாபம் தெரிவித்து சிலவசனங்கள் வந்தபோது கிலிகொண்ட புலிக்கு வலி வந்து கூட்டத்தை குழப்ப முற்பட்டது. இதனால் ஆத்திரம் கொண்ட கூட்டத்துக்கு வந்தோர் இந்தப் புலியை வெளியேற்றினர். அது மாத்திரமல்ல உமது பெயரை நாங்கள் 'லிஸ்ற்றில்' போட்டு விட்டோம் என்று ஆசிரியரை மாவீரர் மிரட்டியுமுள்ளனர்.*

*ஆனால் இதில் வேடிக்கை என்னவென்றால் அந்தப் பத்திரிகையே இந்தச்சம்பவத்தை இருட்டடிப்புச் செய்து விட்டது. இதிலிருந்து இந்த எழுத்து வித்தகர்களின் நேர்மையை இந்த நடுநிலையாளர்களின் நியாயத்தை புரிந்து கொள்ளலாம்.*

*மக்களின் கவனத்தை திசைதிருப்பும் வகையிலான செய்திகள், குருட்டுத்தனமான ஆசிரியர் பார்வைகள், ஒருதலைப்பட்சமான அரசியல் ஆய்வுகள் இவை எல்லாம் தமிழ்பேசும் மக்களுக்கு இந்தப் பத்திரிகைகள் செய்யும் துரோகங்கள். புலம் பெயர்ந்தவர்களின் வரலாற்றின் கறைபடிந்த பக்கங்கள்.*

*அன்பார்ந்த தமிழ்பேசும் மக்களே! இந்தப் பத்திரிகையாளர்கள் தம்மை விடுதலைப் புலிகள் என்றோ அல்லது அவர்களது ஆதரவாளர்கள் என்றோ பிரகடனம்செய்துவிட்டு எழுதட்டும் அப்போது நாங்கள் இவர்கள் குறித்து அலட்டிக் கொள்ளப் போவதில்லை.*

*ஆனால் நடுநிலை முகமூடிகளை அணிந்து கொண்டு இவர்கள் மக்களைக்குழப்புவதையும் உண்மைகளை இருட்டடிப்புச் செய்வதையும் எப்படி ஏற்றுக்கொள்ளமுடியும். அதிலும் இந்த வசதிகளைப் பாவித்து ஒருசில பத்திரிகைகள் இன்னும் ஒருபடி மேலேபோய் பிரேமதாசாவை சமாதானவிரும்பியாகவும், ஆயுதங்கள் மீது நம்பிக்கையற்றவர் எனவும் பிரகடனம் செய்து அரசின் ஏஜென்டுகளாக நமது மக்களிடையே அடிகுலவும் முற்படுகின்றன.*

*மக்களை முட்டாள்களாக கருதும் போக்கும் இங்கு எதையும் வியாபாரம் செய்துவிடலாம் என்ற நினைப்பும் கேள்விகேட்கயாரும் இல்லை என்ற துணிச்சலுமே இந்தப் பத்திரிகைகளை இப்படி எழுத வைக்கிறது.*

*பத்திரிகைகள் என்பன எத்தனைபக்கங்களில் வருகின்றன....எத்தனைநிறத்தில் வருகின்றன ....யார் எழுதுகிறார்கள் என்பதில் இல்லை. என்ன கருத்து வெளியிடுகிறார்கள்...உண்மைக்கு என்ன இடம்கொடுக்கிறார்கள் என்பதில் தான் பத்திரிகையின் மதிப்பு இருக்கிறது.*

*ஒரு பத்திரிகையாளன் அடக்குமுறைக்கு அஞ்சாதவனாக இருக்கவேண்டும். மனச்சாட்சியை அடகு வைத்து எழுதுபவனாக இருக்கக் கூடாது. உண்மை முக்கியமல்ல எனது இருப்பே முக்கியம் என நினைப்பவன் ஒரு பத்திரிகையாளனாக இருக்க முடியாது. [illegible] பேனைக்கும் பொன்விலங்குகள் பூட்டப்பட்டிருக்கும் கைகளும் இருப்பதும் இல்லாமலிருப்பதும் ஒன்றுதான்.*

*இந்தப் பத்திரிகைகளை குறிப்பிட்ட எந்தப் பக்கத்துக்கும் சார்பெடுங்கள் என்று நாம் கேட்கவில்லை. எமக்கு வக்காளத்து வாங்குங்கள் என்று நாம் கோரவில்லை. மாறாக உண்மையான செய்திகளை வெளியிடுங்கோ என்று நாம் கேட்கிறோம். மக்களைக் குழப்பாதீர்கள் என்று நாம் கேட்கிறோம். அடக்கு முறை எந்த உருவில் வந்தாலும் மண்டியிடாமல், மனச்சாட்சியை விற்காமல், எழுத்து விபச்சாரம் செய்யாமல் எதிர்த்து நில்லுங்கள் எனக் கேட்கிறோம்.*

*எதிரியின் சப்பாத்துக்களின் கீழ் மோசமாக எமது மக்கள் நசிபடும் இந்த வேளையில் புலம்பெயர்ந்தவர்களின் கவனத்தை தேசத்தின் பக்கம் திருப்ப முயலுங்கள். ஆரோக்கியமான அரசியல் விவாதங்களை ஆரம்பியுங்கள். ஆக்கபூர்வமான கருத்துக்களை, செயற்திட்டங்கள் உருவாக வழிசெய்யுங்கள்.*

*இல்லையெனில் உங்கள் நடுநிலை முகமூடிகளைக் கழட்டி வைத்துவிட்டு நீங்கள் யார் என்பதை மக்களுக்கு வெளிப்படுத்துங்கள். உங்கள் எழுத்து வியாபாரத்தை தாராளமாக நடத்துங்கள். நாம் தடுக்கவில்லை. அனால் நீங்கள் இன்று செய்வது ஒரு வரலாற்றுத் துரோகம் என்பதை மறந்து விடாதீர்கள்.*

*அன்பார்ந்த தமிழ்பேசும் மக்களே!*

*சரியான பாதையை நோக்கி எமது மக்களின் உரிமைப் போராட்டம் திசைதிருப்பப்பட நமது சிந்தனைகள் சரியானபடி ஒழுங்கமைக்கப்படவேண்டியது மிகஅவசியம். இன்றைய நிலையில் நமது சரிகளை குழப்ப முயலும் எவையுமே பிழையானவை தான் என்பதை இனம் காண்போம்.*

★ ★ ★ ★ ★ ★ ★

## நோய் அதிகரிப்பு

*வடக்கு கிழக்கு பகுதியில் அண்மைக் காலமாக புற்றுநோய் அதிகரித்து வருகிறது. இராணுவ நடவடிக்கைகளின் போது வீசப்படும் குண்டுகளிலிருந்து வெளியாகும் இரசாயன சேர்க்கைகள் தான் இப்புற்றுநோய் அதிகரித்தலுக்கு காரணமென யாழ்பல்கலைகழகத்தில் இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் பேராசிரியர் கே. கணேசலிங்கம் தெரிவித்துள்ளார்.*

படிப்பகம்

# ஏழுகட்சிகளும் நாலம்சமும்

ஏழுதமிழ்கட்சிகளின் கூட்டணி இன்றைய அரசியல் சூழ்நிலையில் முன்வைத்துள்ள நாலம்ச கோரிக்கை ஒரு முக்கியத்துவத்தையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது. உண்மையில் இது ஒரு கூட்டணியா இல்லையா என்பது இங்கு பிரச்சனைக்குரிய விடயமல்ல. ஸ்ரீ லங்கா அரசு தொடர்பாக வேறுவேறு நிலைப்பாடுகளை இக்கட்சிகள் கொண்டிருந்தாலும், ஆகக்குறைந்தபட்சம் தமிழ்பேசும் மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்திசெய்ய உதவும் அமைதி, சமாதானம், ஜனநாயகச் சூழலை ஏற்படுத்த, இனப்பிரச்சனை அரசியல் ரீதியாக தீர்க்கப்பட வேண்டும் என்ற அதிமுக்கிய கருத்தில் இக்கட்சிகளுக்கிடையில் கருத்தொற்றுமை ஏற்பட்டிருப்பதையே இங்கு கவனத்தில் கொள்ளவேண்டும்.

இன்றைய அரசியல் சூழ்நிலையில் இக்கருத்தொற்றுமை அவசியமானது. இதில் இக்கட்சிகள் உறுதியுடன் இருப்பது வரவேற்கப்பட வேண்டியது. இந்த உறுதியான கருத்தொற்றுமை வெற்றெடுக்கப் படுவதானது கட்சிகளின் கையிலேயே உள்ளது. இக்கருத்தொற்றுமை வென்றெடுக்கப்படுமாயின் தமிழ்பேசும் மக்களுக்கு அரசியல்ரீதியில் பெரும் வெற்றியை ஈட்டிக் கொடுப்பதோடு ஏழு கட்டிகளின் கூட்டணிக்கு இதுவழிவகுக்கும்.

இக்கருத்தொற்றுமை வெற்றெடுக்கப் படுவது பெரும் அரசியல் மாற்றத்திற்கு வழிவகுக்கும். இலங்கை அரசின் பயமுறுத்தல்களில், சதிவலைகளில் வீழ்ந்து பலவீனமடையாது இக்கருத்தொற்றுமையை வென்றெடுக்கவேண்டிய வரலாற்றுக்கடமை தமிழ்பேசும் மக்கள்பால் உண்மையான அக்கறையுள்ள ஒவ்வொரு தமிழ் முஸ்லீம் கட்சிகளுக்கும் உண்டு.

இன்றுவரை நீடித்துவரும் உறுதி தென்னிலங்கையில் பெரும் அதிர்ச்சியையும் கிலியையும் ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் தொண்டமான் அளித்துவரும் ஆதரவும் கவனத்திலெடுக்கப்படவேண்டிய ஒன்றாகும். புலிகளுடன் பேசுவேன் என்றிருந்த தொண்டமான், ஏழு கட்சிகளின் கருத்தொற்றுமைமூலம் வெளிப்படுத்தியுள்ள நாலம்சக் கோரிக்கையின் அரசியல் கனப்பரிமாணத்தை உணர்ந்து கொண்டதோடு, அனைத்து தமிழ்கட்சிகளுடனும் பேசியே தமிழ்பேசும் மக்களின் பிரச்சனை தீர்க்கப்பட வேண்டும் என்ற யதார்த்த நிலையை தெளிவாக புரிந்து கொண்டிருப்பதையே தொண்டமானின் வரவேற்பு எடுத்துக்காட்டுகிறது.

காலத்துக்குகாலம் ஐரோப்பிய உதவிப் பணத்தைப் பெறுவதற்கு வேண்டி சமாதான வேடம்புனையும் பிரேமதாசாவும், ஐ. தே. கட்சியும் இதுவரை இனப்பிரச்சனை தொடர்பாக அரசியல் தீர்வெதையும் முன்வைக்கவில்லை. இப்போது தமிழ்கட்சிகள் முன்வைத்துள்ள நாலம்சக் கோரிக்கையை நிராகரித்துவிட்டு அரசியல் நகர்வில் நெடுந்தூரம் போய்விடமுடியாது.

தமிழ்பேசும் மக்கள்சார்பில் ஏழுகட்சிகளும் தொண்டமானும் கருத்தொற்றுமைப்பட்டுள்ளதென்பது குறைத்து மதிப்பிடக்கூடிய ஒருவிடயமல்ல. தமிழ்பேசும் மக்களை அதிகபட்சம் பிரதிநிதித்துவப்படுத்தும் இக் கட்சிகளின் கருத்தொற்றுமையின் சர்வதேச அபிப்பிராயத்திலிருந்து பிரேமதாசாவோ ஐ.தே.கட்சியோ விலகிச்சென்று விடமுடியாது.

ஐ.தே.கட்சிக்கு நிகராக பிரதான எதிர்கட்சியாக செயற்பட்டுவரும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, ஏழுகட்சிகளின் நாலம்சக் கோரிக்கையை நிராகரித்திருப்பது என்பது அவர்களின் பாரியபொறுப்பிலிருந்து நழுவுந் தன்மையையே எடுத்துக்காட்டுகிறது.

ஐ.தே.கட்சி போன்று பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் இனப்பிரச்சனை தொடர்பாக எந்த தீர்வையும் முன்வைக்காத சுதந்திரக் கட்சி இனப்பிரச்சனையில் பெரிதாக எதையும் அள்ளிக்கொடுத்துவிடும் என்று எதிர்பார்க்க முடியாது. ஆனால் தம்மை முற்போக்கு சக்தியாக காட்டிக்கொள்ளும் சுதந்திரக் கட்சி புராதனகாலப் பாணியில் இன்னும் நடந்துகொண்டு 'ஹெல உறுமய' தன்னகத்தே உள்ளடக்கிக்கொண்டு இனியும் தொடருமானால் தேசியக்கட்சி என்ற வாசகத்தைக்கூட இழக்கவேண்டிய எதிர்காலத்தை எதிர்நோக்க வேண்டிவரும்.

கடந்தகாலங்களில் மாகாணஅரசு, அரசுக்கான அதிகாரப் பரவலாக்கல்கள் தொடர்பான வலியுறுத்தல்களில் வழங்கவேண்டிய எமது ஆதரவில் நாம் ஏனோதானோ என்று நடந்து கொண்டதால்,இன்று அரசியல் சூனியம் ஏற்பட்டு எதிர்காலமே கேள்விக்குறியாகிப் போனதற்கு நாமே காரணமானதை பாடமாககொண்டு இந்த நாலம்சக் கோரிக்கையை வரவேற்று ஆதரிப்பதோடு, இதனை வென்றெடுக்க, உறுதியாயிருக்க கட்சிகளை வலியுறுத்துவோமாக.

இவர்களின் நிலையற்ற தன்மையால் நவசம சமாஜக் கட்சிபோன்ற கட்சிகளின் இனப்பிரச்சனைக்கான ஆதரவும் பிரியோசனமற்றதாகிவிடும்.

அர்த்தமற்ற யுத்தத்தால் ஏற்பட்டுவரும் அழிவுகளை மனதில்கொண்டு இன்றைய சூழலில் அரசியல் தீர்வுக்கு ஏழு கட்சிகளின் கருத்தொற்றுமையையும், நாலம்சக் கோரிக்கையின் அவசியத்தையும் தெளிவாக விளங்கிக் கொண்டு ஆதரவுதெரிவிக்க அனைவரும் முன்வரவேண்டும்.

யதார்த்தனன்

★ ★ ★ ★ ★ ★ ★

## இலஞ்சமா?

1988ல் நடைபெற்ற ஜானாதிபதி தேர்தலில் முறைகேடுகள் நடந்ததாகவும், அதனை மீள்பரிசீலனை செய்வதோடு தேர்தலை செல்லாமல் ஆக்கவேண்டும் என்றும் எதிர்கட்சியினர் மேல்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தது தெரிந்ததே. சுமார் 577நாட்கள் விவாதத்தின் பின்பு வழக்கு தீர்ப்பு மட்டும் ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

இவ்வழக்கை விசாரித்த மேல்நீதிமன்ற நீதிபதிகள் பத்துபேருக்கு சொகுசு பென்ஸ்கார்கள் அரசதரப்பில் வழங்கப்பட்டள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## பெட்டிக்குள் தலை

தாண்டிக்குளம் தடைமுகாமிலுள்ள புளொட் இயக்க நிலையத்தில் அனாதரவாக விடப்பட்ட பெட்டி ஒன்றுக்குள் ஆண் ஒருவரின் தலை காணப்பட்டது.

நொச்சிமோட்டையில் புலிகளினால் ஒன்பது பேருக்கு 'மரணதண்டனை' வழங்கப்பட்ட கையோடு இந்தப்பெட்டி அங்குகொண்டுவரப் பட்டிருக்கிறது. இப்பெட்டியைத் திறந்து பார்த்தால் 'புளொட்' இயக்கத்தவர்கள் தலை கிடப்பது கண்டு ஆச்சரியம் அடைந்தனர். விசாரணையின் பின்னர் இப்பெட்டியை பெண் ஒருவரே கொண்டுவந்து வைத்துவிட்டு வவுனியா வந்து சேர்ந்ததாக தெரியவருகிறது. தலை துண்டிக்கப்பட்ட நபர் சேமமடுவைச் சேர்ந்த வொறிச்சாரதியான நாகராஜா என்று புளொட் இயக்கத்தினால் அடையாளம் காணப்பட்டது.

# வாசகர் பார்வையில்..

சென்ற இதழில் பத்மநாபா பற்றி நடுப்பக்கத்தில் எழுதியிருந்தீர்கள். அவர் ஒரு சிறந்த நேர்மையான மக்கள் தலைவர். அவரைப் புரிந்து கொள்ளும் நிலையில் இன்னும் எம்மக்களில் பெரும்பான்மையினர் அரசியல் வளர்ச்சியடையாமை வேதனைக்குரியது. அரசியல் வளர்ச்சிகண்டவர்கள் கூடஅவரை வேற்று மனிதனாக, விரோதியாக அல்லது குரோத மனப்பான்மையுடன் ஒதுங்கியுள்ளது அதிக வேதனையானது. தேசிய அரசியலில் உள்ளவர்கள் இன்னும் அறுபது அல்லது எழுபதுகளில் தமிழரசுக்கட்சி, தமிழ்காங்கிரஷ் வீடும் சைக்கிளுமாய் விரோதிகளானது போல இன்னும் பத்மநாபாவைப் பற்றி அறிய முனையாது அல்லது அவர் ஏதோ தீண்டத்தகாதவர் போல, எதிரியைப் பார்ப்பது போல் பார்க்கின்றனர். தம்மை முற்போக்காளர் என்கின்ற அரசியல்வாதிகளோ அல்லது இலக்கிய வாதிகளோ இன்னும் மாவோ தானே சிறந்தவர். லெனின் தான் சிறந்தவர். ஸ்டாலின் தான் சிறந்தவர். ரொக்சிதான் சிறந்தவர் எனச் சண்டையிட்டுக் கொள்கிறார்களே ஒழிய தாம் வாழ்ந்த வாழ்கின்ற மண்ணில் மனிதநேயத்தை மதித்த, சமூக மாற்றத்துக்காக பாடுபட்ட சர்வதேசியவாதி நடைமுறைப் புரட்சியாளன், அரசியல் நேர்மையாளனான சமூகவிஞ்ஞானி பத்மநாபா என்றொரு மாமனிதன் வாழ்ந்திருக்கிறான் என்பதை ஜீரணிக்கிறார்கள் இல்லை. ஆனாலும் பத்மநாபாவின் இலட்சியங்கள் ஈழமண்ணில் காற்றோடு, மக்கள்வாழ்வில் கலந்து விட்ட ஒன்று. என்றோ ஒருநாள் பத்மநாபா மக்களால் மதிக்கப்படுவார் என்பது உண்மை

அரைநிலப்பிரபுத்துவத்தின் எச்ச சொச்சங்களில் முதாலாளித்துவம் அமைத்துக் கொண்டிருக்கும் சமூகஅமைப்பில் பிறந்து வளர்ந்து அதே குணாம்சங்களைக் கொண்டு வாழ்ந்து வரும் மக்கள் பத்மநாபா போன்றோரைப் புரிந்து கொள்ள அல்லது மதிக்க முடியாமைக்கு விசேட காரணங்கள் எதுவுமே தேவையில்லை.

சிவகரன்–கனடா


'புலிகளின் சர்வதேச பயங்கரவாதம் அம்பலம்' என ஒரு கட்டுரை பார்வை-13ல் வெளியாகி இருந்தது. இக்கட்டுரையுடன் 'புலிகளைப் பற்றியே புதியபார்வை எழுதுகின்றது' என அதே இதழில் வெளிவந்த வாசகர் ஒருவரின் அழுதவடிதலையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, புலிகளின் இந்த அரசியல் வங்குரோத்து அடாவடித் தனங்களை, ஏகாதிபத்தியக் கைக்கூலிகளாக அருவருக்கத்தக்க நாகரீகமற்ற செயல்களை மூடிமறைக்கப் படவேண்டுமென அந்தவாசகர் விரும்புகிறாரா

புலிகள் ஒரு பாசிச சக்தியே அன்றி அவர்கள் ஒரு தேசிய சக்தி அல்ல என்பதையும், அவர்கள் தமது சொந்த நலன்களுக்காகவே ஆயுதமேந்தி உள்ளார்கள். தேசிய விடுதலைக்காக அல்ல என்பதையும் முதலில் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். சுவாசிக்காமல் உயிர் வாழமுடியாதது போல ஆயுதம் இல்லாமல் வாழமுடியாத நிலைக்கு தள்ளப்பட்டுவிட்ட மனநோயாளிகள் புலிகள் ஜனநாயகத்தை அனுமதிக்க மாட்டோம், அமைதி, சமாதானம் தோன்ற விடமாட்டோம் என கடந்த பத்து வருடங்களுக்கு நோயாக அடம் பிடித்து வரும் புலிகள் தேசிய சக்திகள் அல்ல. இவர்களின் சர்வதேச பயங்கரவாதம் தமிழ்மக்களின் தேசிய விடுதலையுடன் தொடர்புடையதோ அன்றி தேசிய விடுதலைக்கு வேண்டி நடாத்தப்படுவதல்ல. தெற்காசிய பிராந்தியத்தில் ஆயுதவிற்பனைக்கும், அதிகார நிலைப்புக்கும் வேண்டி ஏகாதிபத்திய சக்திகள் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்காக பின்னப்பட்டுள்ள வலையில் கைக்கூலிகளான புலிகள் தமக்கே விளங்காத நிலையில் வீழ்ந்து விட்டார்கள். இவர்கள் இதிலிருந்து மீளவேண்டும் என்று நினைத்தால்கூட அவர்கள் அழிவதை தவிர்க்க முடியாதது. இப்படியே தொடர்ந்து கொண்டிருந்தாலும் புலிகள் அழிவதே முடிவாகும். இவர்களைப்போன்ற பல ஏகாதிபத்திய கைக்கூலிகள் அழிந்து போனதை வரலாறு எமக்கு உணர்த்தி நிற்கிறது. புதியபார்வை தொடர்ந்தும் புலிகளின் பாசிச நடவடிக்கைகளை அம்பலப் படுத்தவேண்டும். ஏனெனில் இவர்களின் அம்பலங்களை, அழிவுகளை மக்கள் விளங்கிக்கொள்ளும் போதுதான் எதிர்காலத்தில் விழிப்பாக இருக்க முடியும்.

(வி.பார்த்திபன்-ஜேர்மனி)

★ ★ ★ ★ ★ ★ ★

## எவடம் எவடம்



எவடம்? எவடம்?
பு(லி)ளியடி பு(லி)ளியடி
கண்ணைக் கட்டி
கட்டுண்டு செல்பவர்
கேட்கும் கேள்வியோ
எவடம்? எவடம்?

கட்டிய சிறுவன்
சொல்லும் பதிலோ
பு(லி)ளியடி பு(லி)ளியடி

கண்கள் இரண்டும்
கட்டுண்ட பின்னர்
பு(லி)ளியடி என்ன?
புத்தடி என்ன?

--------நந்து--------

★ ★ ★ ★ ★ ★ ★

# புலிகளின் கடத்தல்

## கப்பல் தகவல்கள் கைப்பற்றப்பட்டது

புலிகளின் ஆயுதம் மற்றும் தங்கக் கடத்தல்கள், பேரங்கள், கப்பல் கம்பனிகள், வர்த்தக நிலையங்கள் பற்றிய தகவல்களைக் கொண்ட முக்கிய ஆவணங்களை பம்பாய் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் பலநாடுகளில் மேற்கொண்டுவந்த இரகசிய வேலைகளை இந்தியப் பொலிசார் அம்பலப்படுத்தியுள்ளனர். இந்தியா, பிரிட்டன், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, கனடா, மொரீசியஸ், கம்பூச்சியா, மலேசியா உட்பட பலநாடுகளில் ஆயுதக்கடத்தல்கள், தங்கக் கடத்தல்கள் ஆகியவற்றுக்காகவும் நிதி சேர்ப்பதற்காகவும் வர்த்தக நிலையங்கள் கப்பல் சேவைகள் உட்பட பல நடவடிக்கைகளைப் புலிகள் மேற்கொண்டுள்ளனர்.

இன்டர்போல் சர்வதேச பொலிசாரிடமிருந்தும் பல நாடுகளைச் சேர்ந்த மேலதிகாரிகளிடமிருந்தும் மேலதிக விசாரணைகளுக்கான உதவிகளை இந்தியப் புலனாய்வாளர்கள் கோரியுள்ளனர்.

பம்பாயிலுள்ள லோக்கண்டவாலா கட்டடத் தொகுதியிலுள்ள ஆடம்பர வீடொன்றைக் கடந்த மே மாதம் 30ம் திகதி பம்பாய் பொலிசார் சோதனையிட்டபோது பல தகவல்கள் அம்பலத்திற்கு வந்தன. மயிலிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட தர்மலிங்கம் சண்முகம் குமரன் என்ற புலிஇயக்க ஆயுத விநியோகஸ்தர் தங்கியிருந்த வீடே பொலிஸ் சோதனைக்குட்படுத்தப்பட்டது. பொலிசாரிடம் அங்கு பல முக்கிய ஆவணங்கள் சிக்கின. பொலிசார் அந்த வீட்டை சோதனையிட்டபோது அங்கு தங்கியிருந்த வங்காளப் பெண்ணான பிரதிமா தாஸ் என்பவர் கைது செய்யப் பட்டார். இந்தப் பெண் முன்னர் தாய்லாந்திற்கு விஜயம் செய்து அங்கு குமரனுடன் பத்து நாட்களைக் கழித்தவராவார்.

குமரனின் வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்ட ஆவணங்களிலிருந்து அவர் புலிகளுக்காக ஆயுதங்கள் கொள்வனவு செய்தவிடயங்கள் தெரியவந்தன. கம்பூச்சியா கெரில்லா இயக்கமான கெமர்மக்கள் தேசிய விடுதலை முன்னணியிடமிருந்து ஆயுதக் கொள்வனவிற்கான பேச்சு வார்த்தையை தாய்லாந்து கம்பூச்சிய எல்லையிலுள்ள ஆரண்ய பிரதாப் என்ற இடத்தில் குமரன் நடத்தியுள்ளார். கம்பூச்சியா கெரில்லா இயக்கத்திலிருந்து ஆயுதங்களை கொள்வனவு செய்வதற்கான பேச்சுவார்த்தையை வெற்றிகரமாக நடத்திய பின்னர் புலிகளுக்கான ஆயுத விநியோக பேரத்தில் ஈடுபடுவதற்கு இவர் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகியநாடுகளுக்குச் சென்றிருந்தார்.

பிரிட்டனில் 1990 ஜுன் 13ம் திகதி மரைன்சிப்பிங் அன்ட் ரேடிங் என்றபெயரில் கப்பல் கம்பனியொன்றை பத்தாயிரம் ஸ்ரேலிங் பவுண் முதலீட்டுடன் (எட்டு லட்சம் ரூபா) குமரன் ஆரம்பித்தார். பிரிட்டனிலுள்ள யு என் சி சென் பீட்டர் போல் என்ற இடத்தில் 31/33, லீபோல்டே வீதியில் இக்கம்பெனியின் அலுவலகம் ஆரம்பிக்கப் பட்டது. இக்கம்பெனியின் பணிப்பாளர் சபையில் பஞ்சலிங்கம் விஜயகுமார், சபாநாயகம் ககநேசன், தோமஸ் அமலதாஸ், கமலசிங்கம் ஆனந்தராஜன், இரட்ணசபாபதி நரேந்திரன் ஆகிய புலிஇயக்கத் தலைவர்கள் அங்கம் வகித்தனர். சிங்கப்பூரில் பிளைமவுத்மரைன் பிறைவேட் லிமிட்டெட் என்ற பெயரில் மற்றொரு கப்பல் கம்பனி ஸ்தாபிக்கப்பட்டது. குமரனுடன் அருளானந்தன். கேப்டன் விஜயகுமார். ஈஸ்வரன் சிங்காரஜன் ஆகியோரை பங்காளராகக் கொண்டு இக்கம்பனி ஆரம்பிக்கப் பட்டது. சிங்கப்பூர் இலக்கம் 668, சங்கர்வீதியில் தங்கியிருந்த அருளானந்தன் விசைப்படகுகள் இழைக் கண்ணாடிப் படகுகள் மற்றும் புலிகளுக்கான விநியோகப் பொருட்களைக் கொள்வனவு செய்ய புலிகளுக்கு உதவினார்.

யாழ்ப்பாணம் மயிலிட்டியைச் சேர்ந்த குமரன் கே.பத்மநாதன் என்ற பெயரில் பல நாடுகளுக்கு விஜயம் செய்துள்ளார். தென்கிழக்காசிய நாடுகளிலுள்ள பல கெரில்லா குழுக்களுடன் தொடர்புகொண்டிருந்த குமரன், கம்பூச்சியா, தாய்லாந்து, பர்மாஆகிய நாட்டு இயக்கங்களிடமிருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்துள்ளார். 1990 ஆகஸ்டில் இல 432432 இலங்கம் கொண்ட இந்தியப் பாஸ்போட்டைப் பயன்படுத்தி இவர் சைப்பிரசுக்கு விஜயம் செய்துள்ளார்.

யாழ் பல்கலைக்கழக கலைப்பட்டதாரியான குமரன் 1983ம்ஆண்டு சிங்கப்பூரிலிருந்து ஒரு கோடி ரூபா பெறுமதியான தங்கத்தை பம்பாய்க்கு கடத்தியபோது இந்தியப் பொலிசாரிடம் சிக்கிக் கொண்டார். வகில் கந்தசாமி என்ற புலிஇயக்க உறுப்பினர் ஒருவரும் இவரோடு சேர்ந்து கைதுசெய்யப்பட்டார். ஆனால் இவர்கள்மீது வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை.

1984ம் ஆண்டு இவர் இரண்டாவது தடவையாக பிடிபட்டார். அப்போதும் அவர்மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. பொயின்பிற்றோ சிப்பிங் கம்பனி என்ற பெயரில் பனாமாவில் கப்பல் கம்பனி ஒன்றைக் குமரன் பதிவு செய்திருந்தார். அங்கு ஸ்கை பேர்ட், யெஸ்ற்சின் என்ற பெயர்களில் இரு கப்பல்களை அவர் வைத்திருந்தார். ஸ்கை பேர்ட் கப்பல் மலேசியாவில் பிடிபட்டது.

1990ம் ஆண்டு சைப்பிரசில் இவர் கப்பல் கம்பனி ஒன்றை ஆரம்பித்தார். இவரது இரகசிய நடவடிக்கைகள் சைப்பிரஸ் அரசாங்கத்திற்கு தெரியவந்ததை யடுத்து 1991 ஜனவரியில் இவரது கம்பனி மூடப்பட்டபோது சைப்பிரஸ் நாட்டுக்குள் வரக்கூடாது என இவருக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்தியாவில் பல கம்பனிகளில் குமரன் முதலீடுசெய்திருந்தமை தொடர்பான விபரங்களும் வங்கிக் கணக்குகள் பற்றிய விபரங்களும் குமரனது பம்பாய் மாடிவீட்டிலிருந்து பொலிசாரால் கைப்பற்றப் பட்டன.

✶ ✶ ✶ ✶ ✶ ✶ ✶

## ஆயிரம் புலிகள் விலகத் தயார்

யாழ் குடாநாட்டில் புலி இயக்கத்திலிருந்து ஆயிரம் உறுப்பினர்கள் விலகத்தயாராக இருக்கிறார்கள். இயக்க வாழ்க்கையை வெறுக்கும் இவர்கள் நிம்மதியாக, சகஜ சூழலில் வாழ விரும்புகின்றனர் என்று வவுனியாவில் புளொட் இயக்கத்திடம் சரணடைந்த மூன்று புலி இயக்க உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் புலிகள் பலவீனமுற்றுள்ளனரென்றும் இராணுவத்தினர் வெற்றிபெறக் கூடிய வாய்ப்புகள் உண்டென்றும் அவர்கள் தெரிவித்தனர்.

நொச்சிமோட்டையிலுள்ள புளொட் தடைமுகாமில் சரணடைந்த மூன்று புலி இயக்க உறுப்பினர்கள் வவுனியா புளொட் அலுவலகத்தில் அளித்த பேட்டியின் போதே இவ்வாறு கூறினர். புத்தூரைச் சேர்ந்த பாண்டியன் என்ற இயக்கப் பெயரால் அழைக்கப்படும் பாலன்(16) நீர்வேலியைச் சேர்ந்த சுஜித் (இயக்கப் பெயர்) அல்லது கண்ணன் (19), சங்கானையைச் சேர்ந்த ஈசன் (இயக்கப் பெயர்) அல்லது சுகுணராஜா (21) ஆகிய மூவரும் வவுனியா நிருபர்களுக்கு அளித்த பேட்டியின் போது இவ்வாறு கூறினர்.

நாம் பாடசாலையில் படித்துக்கொண்டிருந்தபோது இயக்கத்தில் சேர்ந்தோம். வட்டக்கச்சி புலிமுகாமில் மூன்றுமாதகாலப் பயிற்சி பெற்றோம். ஆசையின் காரணமாக இயக்கத்தில் சேர்ந்தோம். இயக்கத்தில் ஏற்பட்ட வெறுப்பின் காரணமாக இன்று அதனைவிட்டு வெளியேறுகிறோம். வெளிநாட்டுக்குச்சென்று வாழ்வதே நிம்மதி எனக்கருதி புளொட் இயக்கத்தினரிடம் சரணடைந்தோம். புலி இயக்கத்தை விட்டு வெளியேறும் எவரும் புலிஇயக்க கட்டுப்பாட்டு பிரதேசத்தில் நிம்மதியாக வாழ முடியாது. சகஜவாழ்க்கை முறைக்குத் திரும்பி நிம்மதியாகவாழவிரும்பி நாம் அங்கு வாழமுடியாத காரணத்தினால் வெளிநாட்டுக்குச் செல்லவிரும்புகிறோம்.

யாழ்ப்பாணத்தில் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த சுமார் ஆயிரம் உறுப்பினர்கள் எங்களைப்போல் இயக்கத்தைவிட்டு வெளியேற விரும்புகின்றனர். புலி இயக்கத்தில் பயிற்சிபெற்ற ஒருவர் இயக்கத்தைவிட்டு விலகுவது என்பது இலகுவான காரியமல்ல. அப்படி விலகவிரும்புபவருக்கு ஒருவருட காலத்தண்டனை கிடைக்கும். இத் தண்டனைக்குப் பின்னர் தான் ஒருவர் இயக்கத்தைவிட்டு வெளியேறமுடியும். அப்படி இயக்கத்தை விட்டு விலகினாலும் யாழ் குடாநாட்டை விட்டு வெளியேற புலிகள் அனுமதியளிக்க மாட்டார்கள். இவற்றையெல்லாம் யோசித்த பின்னர் தான் சரணடைந்து சகஜமான வாழ்க்கை நிலைக்குத் திரும்ப நாம் விரும்பினோம்.

அண்மையில் தெல்லிப்பளையில் நடந்த சம்பவமொன்றில் 90 புலிகள் பலியானார்கள். புலிகள் பலவீன முற்றிருக்கின்றனர். இராணுவ நடவடிக்கை வெற்றிபெறக் கூடிய சந்தர்ப்பம் இருக்கிறது என்றும் அவர்கள் கூறினர்.


ஈழமக்கள் செய்தித் தொடர்பு நிலையம்.

EELAM PEOPLES INFORMATION CENTRE

| | | | |
|---|---|---|---|
| POST BAG - 5551<br>MADRAS - 600094<br>INDIA. | B.M. BOX - 1738<br>LONDON-WCIN-3XX<br>U. K. | POST FACH - 100206<br>4600 DORTMUND - 1<br>GERMANY. | |
| P . BOX 6800<br>AGINCOURT<br>ONTARIO M1S3C6<br>CANADA. | BOITE NO - 69<br>7 - RUE RACINE<br>95140 - GARGES<br>FRANCE. | POST BOKS - 115<br>GROURD HAGENEN<br>0905 - OSLO - 9<br>NORWAY. | POST BOX - 52<br>LAVERTON<br>VICTORIA - 3028<br>AUSTRALIA. |


ஈழமக்கள்புரட்சிகரவிடுதலைமுன்னணியின் பிரச்சாரப்பிரிவான ஈழமக்கள்செய்திதொடர்புநிலையத்தின் ஐரோப்பியப்பிரிவினால் புதியபார்வை வெளியிடப்படுகிறது.

www.padippakam.com
படிப்பகம்